Chundikuli Branch Library
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 1 ஷவ்வல 27 இதழ் 156
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-7 1985

## யாழ். நிதி நிறுவனத்தில் 12,500 ரூபா கொள்ளை!

### துப்பாக்கி முனையில் 3 இளைஞர் கைவரிசை!

(யாழ்ப்பாணம்) யாழ் காங்கேசன்துறை வீதியிலுள்ள நிதி நிறுவனமொன்றில் நேற்றுப் பிற்பகல் துப்பாக்கி முனையில் 12,500 ரூபா கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இனந்தெரியாத இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

மூவரில் ஒருவர் வெளியில் நிற்க இருவர் உள்ளே பாய்ந்து வந்து துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி ஊழியர்களைப் பேசாமல் படுக்குமாறு பணித்ததாகவும் கூறப்படுகிறது.

இதன்பின் காசாளரைப் பயமுறுத்தி இரும்புப் பெட்டிச் சாவியைக் கேட்டதாகவும், பின் 12,500 ரூபாவுடன் முக்கிய தஸ்தாவேஜுகள் கொண்ட ஒரு பஞ்சள் சூட்கேசையும் கொண்டுசென்றதாகவும் கூறப்படுகிறது

இச்சம்பவத்தின்போது அவ் வீதியில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது (ஐ)

# "தமிழர் 'சுதந்திரம்' மீது இணக்கம் வேண்டும்"

## சென்னையில் ராஜீவ் காந்தி

(சென்னை)

தமிழர்களின் சுதந்திரத்தின் மீது இணக்கம் ஏற்படாத எந்த ஒரு தீர்வும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாகும் என்று நேற்று சென்னையில் பொதுநிகழ்ச்சி ஒன்றில் பேசிய பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கைத்தமிழர்பிரச்னை பற்றி குறிப்பிடும்போது சொன்னார்.

தமிழ்நாட்டில் நடக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் 100 ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுபேசிய திரு ராஜீவ் காந்தி இலங்கை தமிழர்களின் பிரச்னையை பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்

(9-ம் பக்கம் பார்க்க)

## சவூதியில் வேலையின்றித் தவிக்கும் இருபது யாழ். இளைஞர்கள்

(சவூதியில் இருந்து எம. சுபேந்திரன்)

அண்மையில் இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யாழ். இளைஞர்கள் இருபது பேர் இங்கே வேலையில்லாமல் காலத்தைக் கழித்துவருகிறார்கள்.

கடந்த மாதம் 4ம் திகதி சவூதியின் தலைநகரான றியாட்டுக்கு வந்துசேர்ந்த வதிரி, நெல்லியடி, கரவெட்டி, துன்னாலை, வரணி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருபது இளைஞர்களே வேலையில்லாமல் இருந்து வருபவர்களாவர்.

றியாட் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள துப்புரவு வேலையை மேற்கொள்ளும் கம்பெனி ஒன்றிற்கு வந்த இவர்களை, கொள்ளுப்பிட்டியிலிருக்கும் ஏஜென்ஸி ஒன்று வடக்கிலுள்ள தனது சப் ஏஜென்ஸி ஒன்றின் சிபார்சில் அனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## திம்புவில் அதிகாரமற்ற முறையில் நேற்றும் ஆலோசனை

### தமிழ் பிரதிநிதிகள் இன்று சென்னை திரும்புவர்

(கொழும்பு)

பூட்டான் தலைநகரான 'திம்புவில்' தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைத் தூதுக் குழுக்களுக்குமிடையில் அதிகாரபூர்வமற்ற பேச்சுக்கள் நேற்றைய தினமும் இடம் பெற்றதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது.

தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று சென்னை திரும்புகிறார்கள் மீண்டும் ஆகஸ்ட் 12ந் திகதி திம்புவில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் முன்வைக்கக்கூடிய கருத்துக்கள் பற்றியும் ஏற்கனவே இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் பற்றியும் சென்னையில் இவ்வமைப்புகள் கூடி ஆலோசிக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

நேற்று நடந்த அதிகாரபூர்வமற்ற மகாநாட்டில் அடுத்த கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் பற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும். போர் நிறுத்தத்தை மேலும் சிறிது காலம் நீடிப்

[9-ம் பக்கம் பார்க்க]

## நெடுந்தீவு கடலில் பலியானவரின் 36 குடும்பங்களுக்கும் தலா ரூபா 2500 வழங்கப்படுகிறது!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடலில் பலியான 36 பேரின் குடும்பங்களுக்கும் தலா 2500 ரூபா வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் பலியானவர்களின் பின்னுரித்தாளர்கள், அதற்கான பத்திரத்தைப் பூர்த்திசெய்து அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சமர்ப்பித்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

சடலங்களை யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து நெடுந்தீவுக்குக் கொண்டுசெல்வதற்கான சவப்

[9ம் பக்கம் பார்க்க]

## தமிழ்நாட்டில் பாரதப்பிரதமர்


[சென்னை]

தமிழ்நாட்டில் நடைபெறும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டுவிழாவில் கலந்துகொள்ள நேற்று பிற்பகல் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி தமது துணைவியார் திருமதி சோனியாகாந்தியுடன் சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னை விமானநிலையத்தில் தமிழக ஆளுநர் எஸ். எல். குரானா, திருமதி இந்திரா குரானா, தமிழக முதலமைச்சர் ம். ஜி இராமச்சந்திரன் அவர் துணைவியார் ஜானகி ஆகியோர் பிரதமர் ராஜீவ்காந்தியையும் அவரது துணைவியாரையும் மலர்மாலைகள் அணிந்து வரவேற்றனர். இந்த வரவேற்பினையடுத்து பிரதமரும் அவரது துணைவியாரும் சென்னை ராஜ்பவனுக்கு அழைத்துசெல்லபபட்டனர்

மாலையில் சென்னை அண்ணாசாலை நகரிலுள்ள விசேடபாதுகாப்பு அலங்கார மேடைக்கு அழைத்துவரப்பட்ட இந்தியப் பிரதமரும் துணைவியாரும் காங்கிரஸ் நூற்றாண்டினையொட்டி இடம்பெற்ற பிரமாண்டமான ஊர்வலத்தைப் பார்வையிட்டனர். மேடை

(9ம் பக்கம் பார்க்க)



'திம்புவில்' நடைபெற்ற பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்குமுன் புதுடில்லிக்கு விஜயம்செய்திருந்த நான்கு தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் ஒரே இடத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடினர். இடமிருந்துவலம்: திரு. சிறி சபாரத்தினம் (ரெலோ), திரு. கே. பத்மநாபா (இ. பி. ஆர். எல். எவ்) திரு. வி. பிரபாகரன் (தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க இராணுவத் தளபதி) திரு. வி. பாலகுமாரன் (ஈரோஸ்) இவர்கள் திம்பு மகாநாட்டில் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை, அவர்கள் சார்பில் பேராளர்களே கலந்துகொண்டனர்.

## அரச ஊழியர்க்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பது பற்றி நிதியமைச்சு அதிகாரிகள் குழுவொன்று ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

விலைவாசிகள் அதிகரிப்பு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றை உத்தேசித்தே இந்த சம்பள உயர்வு பற்றி ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. புதிய வரவு செலவுத் திட்டத்தில் இந்த சம்பள உயர்வு அறிவிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ் தேவி தாமதமாக புறப்பட்டது

(யாழ்ப்பாணம)

காங்கேசன்துறையிலிருந்து நேற்றுக்காலை கொழும்பு புறப்பட்ட யாழ்தேவி இன்ஜின் கோளாறு காரணமாக ஒரு மணித்தியாலம் தாமதமாகப் புறப்பட்டது.

யாழ்ப்பாணம் ரயில்நிலையத்திலிருந்து காலை 6-52 மணிக்கு புறப்படவேண்டிய யாழ்தேவி காலை 8-15 மணிக்கே புறப்பட்டது.

# விளம்பரம்

## தேவை

ரூபா பத்து லட்சம் பெறு மதியுள்ள ஆதனம் ஒன்றிற்கு ரூபா இரண்டு லட்சம் ஈடாக உடனடியாகத் தேவை. தயவு செய்து தொடர்பு கொள்ள வும்; விளம்பர இல: 4462, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பா ணம். 4462

பல இன கோழிகளும் இறச் சிக்குத் தேவை கிலோ 30ரூபா வரை நேரில் வந்து பெற்றுக் கொள்ளப்படும். விபரங்களுக்கு ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா ணம். 4420

நன்கு கழுவிக் காயவைத்த கோழி முட்டைக்கோது மொத்தமாகத் தேவை. தொடர்பு: M G M. Forage Stores, 208, 1st Cross Street, Jaffna. 4437

## தவறிவிட்டது

642660012 V இலக்க அடை யாள அட்டை தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் K. சுதாகரன், அப்பிளானை, சோப்பாய் வடக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பு மாறு தாழ்மையாக வேண்டு கிறேன். 4464

எனது அலோசியஸ் இம் மானுவல் ஞானப்பிரகாசம் என்ற பெயருடைய பாஸ் போட்டை 782 இலக்க யாழ்-காரைநகர் மினிபஸ்ஸில் தவற விட்டுள்ளேன். கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து யாழ். சுப்பர் மார்க்கட் அசோகன்ஸ் பிடவை ஸ்தாபனத்தில் ஒப்ப டைக்க வேண்டுகிறேன். சன் மானம் வழங்கப்படும். 4458

## காணவில்லை

சாவகச்சேரி றிபேக் கல்லூரி வேலியில் சாத்தி வைக்கப் பட்ட ஹம்பர் (Humber) சயிக் கில் இல: 72 H 901 13ந் திகதி சனிக்கிழமை காலை 8 30 மணி அளவில் காணுமல் போய்விட் டது. சயிக்கிலுக்கு அருகில் இருந்த லொறியில் சயிக்கிளை ஏற்றிச் சென்றதாக தகவல் கிடைத்துள்ளது. எடுத்துச் சென்றவர்கள் தயவு செய்து உடனடியாக பின்வரும் சொந் தக்காரரிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். ரி. பி. ஹன்ற் சேவை யர், கோட் கொமிஷனர், 50/1, தேவாலய வீதி, சாவகச்சேரி 4466

## சேவை

நாட்பட்ட எவ்வருத்தமா னாலும் விசேஷ வைத்திய நிபு ணர்களால் கைவிடப்பட்ட எவ்வித நோய்களானாலும் இறைவனின் அருளால் குண மாக்குவோம். உங்களின் எவ் விதமான தனிப்பட்ட வைத்தி யப் பிரச்னைகளுக்கும் வெளி நாடுகளில் பிரபல்யம் மிக்க வர் இலவச ஆலோசனை வழங்குவார். அத்துடன் மனிதசக்தியால் குணப்படுத்த முடியாத சகலவிதமான தோஷங்களையும், பிணிகளை யும் நீக்கிக் கொள்ள இயந்தி ரத்தகடுகள் துவாக்கள் செய்து கொடுக்கப்படும். ''சா ஹி ஷீ பா'' ஆத்ம ஆத்ம ஆரோக்கிய நிலையம், 125, கடற்கரைவீதி, (பழைய பொலிஸ் நிலையத்திற்கு அரு காமையில்) குருநகர், யாழ்ப் பாணம். 4380

## விற்பனைக்கு

Stop பிறேக் ஒயில் விற் பனைக்குணடு. வர்த்தகர்கள் விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும்: ட்றேட் சென் றர். Home Finance Ltd., 155, மானிப்பாய்வீதி, யாழ்ப் பாணம். 2862

பாவித்தஹொண்டா ஜென றேற்றர். வாசிங் மெசின் ஜே. வி சி வீடியோ டெக் விற் பனைக்குண்டு. தொடர்பு: 84, ஸ்ரான்லி ரோட், யாழ்ப் பாணம். 4469

வட்டக்கச்சி பண்ணைக்கருகா மையில் பிரதான வீதியில் 2 ஏக்கர் காணி மின்சார மற் றும் சகல வசதியுடன்கூடியது, வீட்டுடனும் 3 ஏக்கர் வயல் காணி நீர்ப்பாசன வசதியுட னும் உடன் விற்பனைக்குண்டு. விரைவில் தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: இரத்தினம், சிவிக்ஸ் சென்றர், வட்டக்கச்சி 4459

கோப்பாய் வடக்கு பூதர் மடத்தடி, பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் தோட் டம் செய்ய / வீடு கட்டக் கூடிய 10 பரப்புக் காணி விற் பனைக்குண்டு. Dr. பொ. சச்சி தானந்தம், 'கார்த்திகை' (பூதர் மடத்தடி) கோப்பாய் வடக்கு. 4433

கிளிநொச்சி கண்டி வீதியி லும், சாவகச்சேரிப் பட்டினத் திலும் வீடுகள், கடைகள் கட்டக்கூடிய நிலமும், நெற் காணியும், தென்னந் தோட் டக்காணியும்விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். விளம் பரகாரர், இல: 50/1, வேதக் கோயில் வீதி, சாவகச்சேரி. 4465

**Wanted**

Doctor M B B S., for short term assignment.

SECRETARY
Jaffna Private Hospitals,
394, Navalar Road,
Jaffna. 4449

## இலக்கியச்செல்வர் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியகலாசாலை தமிழ் மன்றத்தினர் இம்மாதம் 18ம் திகதி இலக்கியச் செல்வர் அறிமுகவிழா நடத்தவுள்ள னர்.

தமிழ் மன்றத்தலைவர் தலை மையில் கலாசாலைக்கணித மண்டபத்தில் நடைபெற வுள்ள இவ்விழாவில் கவிதை இலக்கியப் பணிக்காகப்புலவர் ம. பார்வதிநாதசிவம்மும் சிறு கதை இலக்கியப்பணிக்காக கோகிலா மகேந்திரனும் அறி முகம் செய்யப்படவுள்ளனர்.

புலவர் பார்வதிநாத சிவத்தை க. உமாமகேஸ்வரன் அறிமுகம் செய்துவைப்பார். புலவரின் இலக்கியப் பணி பற்றி திலகரத்தினம் பேசுவார்

கோகிலா மகேந்திரனை விரிவுரையாளர் பத்மநாதன் அறிமுகம் செய்துவைப்பார். கோகிலா மகேந்திரனின் இலக் கியப்பணிபற்றி செல்வி செ. சந்திரசேகரம் பேசுவார்.

## நீலக்கடலில் கப்பல்கள் நீந்தவிட்டவர்



தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி என்பதற்கமைய திரைகடலோடியும் திரவியம் தேட விளைந்த யோசேப் சிங்கை நகரைத் தன் இருப்பி டமாக அமைத்துக் கொண் டார். ''பார்க் டேவிஸ்'' மருத்துவ விற்பனைப் பிரதி நிதியாக வாழ்வில் பொருள் தேடக் காலடி வைத்த யோசேப் சுதந்திரம் வேண் டித் துடிக்கும் இயல்பினுதை லால் தாமே கப்பல் கம்பனி ஒன்றை நிறுவ ஆசைகொண் டார்.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. போன்று 'காங் கேசன்துறைமுத்து' கோட் பாதா' எனும் கப்பல்களை நீலத்திரைக்கடலில் நீந்தவிட் டுப் பொருள் ஈட்டினூர். இவை உலகின் பல்வேறு பாகங்களுக்கும் சரக்குக் கப்ப லாகி உலாவிப் பொருள் ஈட் டின. கப்பல் கம்பனியின் நிர் வாக இயக்குநராக வாழ்விற் சிறந்த யோசேப் தனது தந் தையின் நாட்டிலும் தந்தை மீதும் கொண்ட அன்பால் காங்கேசன்துறைமுத்து என நாமம் சூட்டியமை அவரது உள்ளத்தைப்படம் பிடித்துக் காட்டுகிறது. செல்வச் செழிப் பில் வாழ்ந்த இப்பெருந் தகை பல நண்பர்களைத் தனது தூய உள்ளத்தாற் கவர்ந்தார். எத்தனையோ சேவைகளைச்செய்து உள்ளன் மையை வெளிக் கொணர்ந் தார். வாழ்க்கை நிலையாமை க்கு யோசேப் அவர்கள் விதி விலக்காக இருக்கமுடியவில்லை. லொஸ் ஏஞ்சல்லில் மருத் துவ மனையின் நிபுணத்துவம் மிக்க டாக்டர்களின் வல்ல மையையும் மீறி ஜூன் 16-ம் நாள் நிலவுலக வாழ்வை நீத் தார்,

தனது ஆசியா, சந்திரர் போன்ற செல்வக்குழந்தை களை இறுதி மூச்சுவரை நன் மைப்படுத்த விரும்பி பொறி யியலாளராக ரவீந்திரனைப் புகழேணியில் வைத்தார் மகள் தமயந்தியை கணக்கி யல் துறையில் மேம்படுத்த விழைந்தார்.

அன்னாரின் ஆன்மசாந்தி மக்களின் புகழ்நிலையிலுள்ள தென்பது அவரின் அடராத உழைப்பிலும் ஊக்கத்திலும் அமைந்ததொன்று பண்டை நாட்களின் தந்தை குலாவிய திருநகராம் கசாத்துறையில் வந்து குலாவிய கலங்களையும் பண்வடங்களையும் சிங்கை நகரிற்கண்ட சிங்கமாய் வானு லகு சென்றுயர்ந்தார்.

யாழ். சம்பத்திரிசியார் கல் லூரியிலும் கொழும்பு அர்ச் சூசையப்பர் கல்லூரியிலும் இவர் கல்விபெற்றூர்.

கிறிஸ்தவனுய்ப் பிறந்தும் ''தென்னுடைய சிவன் எந் நாட்டவர்க்கும் இறைவன் என்ற மணிவாசகம் போல் இந்துவை வரித்து ஈற்றில் அக் கினியில் சங்கமமாகி காசியில் கலந்தார்.

—சி. வேலாயுதம்,
(அதிபர் காங்கேசன்துறை மகாவித்தியாலயம்)

## யாழ். மாநகர சபை: குப்பைகளை அகற்ற விசேட நடவடிக்கை

(வண்ணார்பண்ணை)

யாழ். நகரின் குடிசன நெரு க்கமுள்ள பகுதியான குருந கர்ப் பகுதியில் குப்பை கூழ ங்களை அகற்றுவதற்கு ஞாயிற் றுக்கிழமை விசேட நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன.

யாழ். மாநகர ஆணையார் திரு. சி. வி. கே. சிவஞானத் தின் உத்தரவின் மீது இந்த விஷேட இருநேர மேலதிக வேலைகள் செய்யப்பட்டன.

யாழ். மாநகரசபையில் கட மையில் ஈடுபட்டு வரும் சுகா தார சேவை லொறிகள் தற் பொழுது மிகவும் குறைவாக இருப்பதால் நாளாந்த வேலை களை விடசில பகுதிகளில் மேலதிகமாகவும் சுத்திகரிப்பு சேவை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்திட்டப் படி ஞாயிற்றுக்கிழமை குருந கரில் இந்த விஷேட சுத்திக ரிப்புச் சேவை இரண்டு தட வைகளில் மேற்கொள்ளப் பட் டன.

அதிகமாக குப்பை தேங்கி நிற்கும் பகுதிகளில் ஞாயிற்று கிழமைகளில் இந்த விஷேட சேவை நடைபெற ஒழுங்கு கள் செய்துள்ளதாக ஆணை யாளர் தெரிவித்தார்.

## ''பிள்ளைகளின் உடல்வளர்ச்சியில் பெற்றோரின் கவனம் வேண்டும்''

(மண்டைதீவு)

''பிள்ளைகளின் உளவளர்ச் சியிலும், அறிவு வளர்ச்சி யிலும் பெற்றோர் எவ்வளவு அக்கறை செலுத்துகின்றூர் களோ, அதேபோன்று அவர் களது உடல்வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்தவேண் டியது மிக அவசியமாகும்''

இவ்வாறு மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற வருடாந்த இல்ல விளை யாட்டுப் போட்டியில தலைமை தாங்கிப் பேசிய பாடசாலை அதிபர் சு. சண்முகநாதன் தெரிவித்தார்.

பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட் டுப்போட்டியை வட்டாரக் கல்வி அதிகாரி [உடற்கல்வி] திரு வி. கணேசலிங்கம் தீபம் ஏற்றி ஆரம்பித்து வைத்தார்

இவ்விழாவில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட வடமாநிலகல்விப்பணிப்பாளர் திரு சிமியாம்பிள்ளை பேசுகை யில் இன்றைய நிலையில் எம் போன்ற அரச அதிகாரிக ளுக்கு இதுபோன்ற பொது வைபவங்களில் கலந்துகொள் வதிலேயே பெரும் நிம்மதியை யும் மகிழ்ச்சியையும் அனுப விக்க முடிகின்றது என்றூர்.

சிறப்பு விருந்தினராகக் கல ந்துகொண்ட வேலணை வட் டாரக் கல்வியதிகாரி திரு. பொன் கணேசன் பேசுகை யில் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற மூன்று அம்சங்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு இன்று அறிவு வளர்க்கப்படுவது அவசியமா வதுபோல உடல் உறுதியும், ஆரோக்கியமும் அவசியமாகி றது என்றூர்.

இவ்விளையாட்டுப் போட்டி யில் சேரன் இல்லம் முதலாம் இடத்தையும், பாண்டியன் இல்லம் இரண்டாம் இடத் தையும், சோழன் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற் றன.

கல்விப் பணிப்பாளர் திரு சிமியாம்பிள்ளை பரிசில்களை வழங்கினூர்,

## ''தமிழரின் கல்வி விளையாட்டு துறைகள் அருகிவருகின்றன'

(கரவெட்டி)

'ஒரு காலகட்டத்தில் விளை யாட்டுக்கள் குறித்த சில பாடசாலைகளுக்கே சொந்த மாயிருந்தன அரசு பாடசாலை களை சுவீகரித்த பின்னரே, நாட்டிலுள்ள மாணவர்கள் அனைவரும் சுதந்திரமாக விளை யாட்டுத்துறையில் ஈடுபட்டு ஊக்கமடைய வழியேற்பட் டது.'

இவ்வாறு கரவெட்டி விக்கி னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு உரை யாற்றியஇக்கல்லூரியின் ஓய்வு பெற்ற உப அதிபர் திரு. ஆ. சுப்பிரமணியம் தெரிவிததார்.

கல்லூரி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினூர்

சுப்பிரமணியம் மேலும் பேசுகையில், 'நான் இந்தக் கல்லூரியின் பழைய மாணவ னுக இருந்தபோது குறிப் பிட்ட ஒரு எல்லைக்குள்ளேயே விளையாடவேண்டியிருந்தது. இங்கு பல திறமையான விளையாட்டு வீரர்கள் இருந்த போதிலும் அத்திறமைகளை வெளிக்கொணர முடியாமல் இருந்தது தென்னிலங்கையில் புகழ்பெற்ற சம்பஹா விளை யாட்டுக் கோஷ்டியைக்கூடத் தோற்கடித்த பெருமை இக்கல் லூரிக்கு உண்டு

நாகரீக காலத்தில் விளை யாட்டுத்துறைக்கு முக்கியத்து வம் கொடுக்கப்படடிருந்தது. ஆனால் இன்று தமிழ் மக்கள் மத்தியில் கல்வித் துறை மட்டுமல்ல, விளை யாட்டுத்துறையும் அருகி வரு கின்றமை கவலைக்குரியதே! என்றூர்.

ஆசிரியர் திரு. ஏ எம், ஜெப ரத்தினம் நன்றி கூறினூர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

புலோலி ஆதார வைத்திய சாலையின் சீர்கேடான நிலைமை கள் பற்றி பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் முறைப் பாடுகளை ஆராயும் பொரு ட்டு, யாழ் பிரதேச வைத் திய பணிப்பாளர் தமது பணி மனையில் பருத்தித்துறை பிர ஜைகள் குழுப் பிரதிநிதிகளு டன் மாநாடு ஒன்றை இன்று நடத்தவிருக்கிறூர்.

## மஞ்சள் இல்லம் வெற்றி

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு மகாவித்தியா லய இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 12ம் திகதி நடைபெற்றது.

முதலாவது இடத்தை மஞ் சள் இல்லமும் இரண்டாவது இடத்தை சிவப்பு இல்லமும் மூன்றுவது இடத்தை பச்சை இல்லமும் பெற்றன இப் போட்டியை நிறைவு செய்து வைக்கும் வைபவத்தில் பேசிய வித்தியாலய அதிபர் திரு. எஸ். செல்லத்துரை பேசுகை யில் மாணவர்கள் சிந்தனையி னுல் தங்களது திறமைகளை வெளிப்படுத்த முடியாது என் றும் இப்படியான போட்டிக ளில்தான் ஒவ்வொருவரும் திறமைகளை வெளிப்படுத்த முடியும். பாடசாலையில் நில வும் குறைகளில் பெற்றோர்க ளும் சட்டாயம் பங்கெடுக்க வேண்டும்'' எனக் கூறினூர்

வெற்றி பெற்றவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில் களை வழங்கினூர்.

# சோவியத்தின் மத்திய ஆசிய மாநிலத்தில் பெரும் மோசடி!

## இரு அதிகாரிகள் மீது நடவடிக்கை!!

மாஸ்கோ, ஜூலை, 15

**சோவியத் யூனியனின் இரண்டாவது மத்திய ஆசிய மாநிலத்தின் பிராந்தியத் தலைவரும், அவரின் உதவியாளர் ஒருவரும் கோடிக் கணக்கான பணமோசடியில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இருவரும் பதவிநீக்கம்செய்யப்பட்டிருப்பதுடன் தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.**

இத்தகவலை சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'பிராவ்தா' நேற்று வெளியிட்டது.

பிராவ்தா மேலும் தெரிவிப்பதாவது:

சோவியத்யூனியனின் இரண்டாவது மத்திய ஆசிய மாநிலமான சதக்ஸ்தானின் அதன் பிராந்தியத் தலைவரும், அவரது உதவியாளர் ஒருவரும் கோடிக் கணக்கான சோவியத் ரூபிள்சன் பணமோசடியில் ஈடுபட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமது மாநிலத்தின் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளை தவருன மேலதிக விபரங்கள் வழங்கிக் கூடுதலாகப் பெற்றுள்ளனர். தொடர்ந்து அப்பணத்தை தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

வேட்டையாடும் விடுதியொன்று உட்பட களியாட்ட மைதானமொன்றையும், வேறு சில தனிப்பட்ட கட்டிடங்களையும் இவர்கள் அமைத்துள்ளனர்.

சிறுவர்களுக்கான வைத்திய சாலையொன்றை அமைப்பதற்கென வழங்கப்பட்ட நிதியிலேயே அவர்கள் இந்த மோசடிகளைப் புரிந்துள்ளனர்.

சோவியத் அதிகாரிகள் இம்மோசடிகளை புலன் விசாரணைகள் மூலம் அம்பலமாக்கியதுடன் அந்த இரு அதிகாரிகளுக்கு கடும் தண்டனைகளையும் விதித்துள்ளனர்.

கடந்த ஆண்டிலும் இது போன்ற பல ஊழல் நடவடிக்கைகள் சோவியத் யூனியனில் அம்பலமாக்கப்பட்டிருந்தன. (கி)

---

## இந்தியவானொலிதொலைக்காட்சியில் முருகதாஸ் பாடல்களுக்குத் தடை!

(சென்னை)

இந்திய வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பித்துக்குளி முருகதாஸின் பாடல்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது

இந்திய அரசின் தடையையும் மீறி, நிறவெறிக் கொள்கையுடைய தென் ஆபிரிக்காவுக்குச் சென்று, அங்கு நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டமைக்காகவே இத்தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இந்நிகழ்ச்சியில் பிரபல இந்திய பாடகர்களான ஜானிபாபு, ஜக்திக், சித்ரா சிங், ராஜேந்திரா. மேத்தா ஆகியோரும் கலந்துகொண்டனர் இவர்களுடைய பாடல்களும் விரைவில் தடைசெய்யப்படவுள்ளனதாக அறிவிக்கப்படுகிறது,

---

### இரு தினங்களில்

## றீகனின் உடல் நிலை துரித முன்னேற்றம்!

### நடமாடுகிறார்; நாவலும் படித்தார்!!

வாஷிங்டன், ஜூலை 5

அமெரிக்க ஜனதிபதியின் உடல்நிலை அதிசயிக்கத்தக்க வகையில் விரைந்து குணமடைந்துவருகின்றது. அவரது வயிற்றின் உட்புறப்பகுதி சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டபோதிலும் தற்போது அதன் செயல்பாடு 40 வயதான நபரொருவருடையதைப் போன்று காணப்படுகின்றது என வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்தார்

இத்தகைய அறுவைச் சிகிச்சைக்குள்ளான 99 சதவீதமானவர்களில் திரு றீகனே மிகவும் குறிப்பிடத்தக்களவு சுகதேகியாகக் காணப்படுகின்றார் என்றும் கூறப்பட்டது.

சத்திரசிகிச்சைக்கு மறுதினமான நேற்று, அவர் தமது ஓய்வெடுக்கும் அறையின் உட்புறத்தில் நடமாடினார். அத்துடன் கதிரையொன்றில் அமர்ந்து சுமார் 45 நிமிட நேரம்வரை நாவல் ஒன்றையும் அவர் படித்தார் தமது அலுவல்கள் சம்பந்தப்பட்ட சில பத்திரிகைகளையும் அவர் பார்வையிட்டார்.

இதே வேளை றீகனின் குடல் பகுதியிலிருந்து அகற்றப்பட்ட சிறிய கட்டி தொடர்ந்தும் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது. இக்கட்டி ஒரு புற்றுநோய்க்கான அறிகுறியாக இருக்கமுடியுமாவென்பதனை ஆராய்வதே இப்பரிசோதனையின் முக்கிய நோக்கமாகும். இன்று அல்லது நாளை இப்பரிசோதனை முடிவுகள் வெளியாகும் என்று கூறப்பட்டது.

---

## இன்று

[வண்ணார்பண்ணை]

கொக்குவில் கோணமலை ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் ஆடிச்செவ்வாய் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஸ்நப அபிஷேகத்துடன் ஆரம்பமாகி அம்பாள் வீதி உலாவும் இடம்பெறும் இதையடுத்து இவ்வாலய போசகர் பிரம்ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களின் மணிவிழா நிகழ்ச்சியும் இடம்பெறவிருக்கிறது

இவ் வைபவத்தில் பேராசிரியர் க. கைலாசநாதக் குருக்களும் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதனும் பாராட்டுரை வழங்கவுள்ளனர்.

★ ★ ★

[உடுவில்]

உடுவில் கிழக்கு கற்பக விநாயகர் ஆலயத்தில் இவ்வருடம் முதல் முதலாக மகோற்சவம் நடைபெறவுள்ளது. இன்று கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெறும். (க)

★ ★ ★

(பண்டத்தரிப்பு)

சில்லாலை தெற்கு புனித சந்தியோகுமையர் தேவாலய வருடாந்த நவநாள் உர்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 25-ம் திகதியன்று கூட்டுத் திருப்பலிப் பூசையும் திருச்சுரூபபவனியும் இடம்பெறவுள்ளது சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு ப. இருதயதாஸ் அடிகள் பூசைகளை நிறைவேற்றுவார்.

★ ★ ★

[சுண்டுக்குளி]

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மெய்வலுநர் போட்டி இன்று நடைபெறவுள்ளது. இதற்கு மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

---

## உயிர்காப்புப் பணியிலும் செய்மதி!

விக்டோரியா, ஜூலை 15

விண்வெளியில் செய்மதிகள் பற்றிப் பல தகவல் உண்டு.

—தொலை தொடர்பு, விண்வெளி ஆராய்ச்சி, வானியல்-காலநிலை ஆய்வுகள் குறித்தே இவைபற்றி பெருமளவு தொடர்புபடுத்தப்படுகின்றது

ஆனால் 'உயிர் காப்பு'ப் பணிகளிலும் இவை பயன்படுத்தப்பட்டுள்ளது மிகவும் அரிதான ஒரு தகவலாகவே இது காணப்படுகிறது

'சார்ஸட்' Sarsat) என்ற இந்த செய்மதியின் உயிர்காப்புப் பணிமூலம் இதுவரை 500 பேர் உயிராபத்துக்களில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்.

1982ம் ஆண்டு இந்த செய்மதிப்பணி ஆரம்பிக்கப்பட்டது அன்றுமுதல்மேற்குறிப்பிட்டளவு தொகையினர் கனடாவில் பெரும் விபத்துக்களில் இருந்து உயிர் காப்பாற்றப்பட்டுள்ளனர்

விபத்துக்கள் நடந்த இடம், பாதிக்கப்பட்டவர்கள் குறித்து 'எலக்ரோனிக' தகவல் பரிமாற்றம் மூலம் இந்த சார்ஸட் செய்மதி உடனடியாக அதன் நிலையத்துக்கு அறிவிக்கின்றது இதன்மூலம் விபத்து மீட்புப்பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன

இந்தமுறை அமெரிக்கா, பிரான்ஸ், கனடா ஆகியவற்றில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் இத்தகையபணியைமேலும்விரிவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (கி)

---

### தென்னுபிரிக்கா செல்ல

## நியூஸிலாந்து 'றகர்' அணிக்குத்தடை!

வெலிங்டன், ஜூலை 15

தென் ஆபிரிக்காவில் 'றகர்' விளையாட்டில் கலந்துகொள்ளவிருந்த நியூஸிலாந்து அணியொன்றுக்கு அந்நாட்டு அரசாங்கம் தென்ஆபிரிக்கா செல்லத் தடைவிதித்துள்ளது.

நியூஸிலாந்தின் வெலிங்டன் நகர மேல் நீதிமன்றமொன்று இத்தடையை விதித்தது.

'றகர்' விளையாட்டில் ஈடுபடும பொருட்டு இம்மாத இறுதியில் தென்னுபிரிக்கா செல்ல 'ஆல்பிளக்' என்ற இந்த விளையாட்டு அணி முடிவு செய்திருந்தது.

நியூஸிலாந்து தேவாலயங்களும அரசாங்கமும் இப்பயணத்தை எதிர்த்தன இதனைத் தொடர்ந்து வெலிங்டன் நீதிமன்றில் இப்பயணத்துக்குத் தடை விதிக்கும்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

இந்த நியூஸிலாந்து அணியின் தென்னுபிரிக்கப் பயணம் இந்நாட்டு மக்களிடையே பெரும் ஆத்திரத்தைக்கிளப்பிவிட்டிருந்தது. இதுகுறித்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பொன்றில் பெருந்தொகையான மக்கள் இந்தப்பயணத்தைக் கண்டித்திருந்தது குறிப்பிடத்தக்கது

தென்னுபிரிக்காவின் நிறப்பினத்தவர் மீதான இன ஒடுக்கல் கொள்கையே இக்கண்டனத்துக்குக் காரணமாகும். (கி)

---

### இந்திய போயிங் 'கனிஷ்க்கா'

## கறுப்புப்பெட்டி பரிசோதனை விடயத்தில் சர்ச்சை!

புதுடில்லி, ஜூலை 15

கடந்தமாதம் அத்திலாந்திக் கடலில் மூழ்கிய இந்திய போயிங் 'கனிஷ்க்கா'வின் கறுப்புப்பெட்டியை சோதனை செய்யும் விடயம் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

மேற்கத்திய விமானத் தொழில் நுட்பத்துறை நிபுணர்கள் 'கனிஷ்க்கா'வின் இரு கறுப்புப்பெட்டிகளையும் சோதனையிடும் திறன் இந்தியாவிடம் போதியளவு இல்லை யெனத் தெரிவித்துள்ளனர் அத்துடன் அச்சோதனைக்கான நிபுணர்களும் இந்தியாவிடம் பற்றாக்குறையாகவே இருக்கின்றனர். என்றும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆயினும் அமெரிக்க தேசிய விமானசேவை நிபுணர் ஒருவர் இந்த கருத்துக்களை மறுத்துள்ளார் ஜேன்யங் என்ற இவர் தற்போது இக்கறுப்புப்பெட்டி விவகாரம் தொடர்பாக இந்தியாவில் இருக்கின்றார்

''கனிஷ்க்காகறுப்புப்பெட்டிகளைப் பரிசோதிக்கும், ஆற்றலும் நிபுணர்களும் இந்தியாவிடம்போதியளவு உண்டு இவ்விடயதில் இந்தியா தனியாக செயல்படக்கூடிய திறனைக் கொண்டுள்ளது'' என்று அவர் தெரிவித்துள்ளார்

கனேடிய விமானத்துறை அதிகாரியொருவரும், கனிஷ்க்கா' விமானத்தைத் தயாரித்த அமெரிக்க 'லொக்ஹீட்' கம்பனி நிபுணர் ஒருவரும் கறுப்புப்பெட்டி பரிசோதனை சம்பந்தமாக இந்தியா வந்துள்ளனர்.

இவர்கள் இப்பரிசோதனைகளில் இந்தியாவுக்கு உதவி செய்யவுள்ளனர் எதிர்வரும் செவ்வாக்கிழமை (இன்று) இப்பரிசோதனை ஆரம்பமாகும். (கி)

---

## மத்திய கல்லூரி கீழ்வகுப்பில் பெண்பிள்ளைகளை அனுமதிக்கவும்

### அபி சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பணம் மத்திய கல்லூரி கீழ் வகுப்புக்களில பெண்பிள்ளைகளும் கல்வி கற்க வசதி செய்யப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று மேற்படி கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது

கடந்த சனிக்கிழமை இக்கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு வி பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

இப்பாடசாலைப் பெற்றார் பழைய மாணவர்களின் வேண்டுகோளின் பேரில் பழைய மாணவரான திரு பொன் பழனிச்சாமி இத்தீர்மானத்தை சபையில் முன் மொழிந்தார். மத்திய கல்லூரியின் சுற்றுடலில் உள்ள ஆண், பெண் குழந்தைகளின் நலன்கருதி இப்பாடசாலையின் ஐந்தாம் வகுப்புவரை கீழ்ப்பிரிவுகளில் பெண் பிள்ளைகளையும் சேர்க்க வேண்டும் என்று இத்தீர்மானம் கூறுகிறது.

**மணிவாக்கு**

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்
அன்றாங்கால்
அல்லற்படுவது எவன்?

—குறள்

# நமது நோக்கு

## சுதந்திர தமிழ்ப் பிராந்தியம்

'திம்பு' பேச்சுக்கள் காயென்றுலென்ன பழமென்றுலென்ன, இன்றைய தமிழ் இளைஞர் சமுதாயம் சிந்தையில் சொல்லில் செயலில் சுதந்திரமாக தாம் வாழ வழி வகுக்கும் நம்பிக்கை கொண்டது.

தங்கள் முன்னோர், இன்றும் வயதடைந்திருக்கும் அரசியல் முதிர்ச்சியும் அனுபவமும் கொண்ட தலைவர்கள் என்ன செய்தார்கள், என்ன செய்யத் தவறினார்கள் என்பது தெளிவடைந்திருக்கிறது.

இளமை முதுமையில் இயல்பான எதிர்ப்புக் கொண்டது காவோலை விழ குருத் தோலை சிரிக்கும் பாவனையும் இந்த எதிர்ப்பில் கலந்திருக்கிறது. இருப்பினும் இலங்கை அரசை (இருவருக்கும் மிகப்பாதுகாப்பான பூட்டானில் சந்திக்க வைத்தசாதனை சிந்தனைக்குரியது.

ஷேக்ஸ்பியரின் யூலியஸ் சீசர் 'நாடகத்தில்' கொலையுண்ட மாவீரன் சீசரின் ஆவி கொலைக்காரராகிய புறூட்டஸ், காசியஸ் கூட்டத்தினரை, பிலிப்பை என்ற பிரபல யுத்தமைதானத்தில் சந்திப்பதாகச் சொல்லியது.

அதே மைதானத்தில் நாட்டின் பெருநன்மை கருதி சீசரின் சர்வாதிகாரத்தை ஒழிக்க, சீசரைக் கொன்ற நண்பன் புறூட்டஸ் கூட்டத்தினர் அனைவரும் ஆவியின் வாக்குக்கமைய கொல்லப்பட்டனர்

பிராமணரைக் கொல்வதால்தான் பிரமகத்தி பிடிக்குமென்பது தவறான விளக்கம், அப்படியானாலும் சீசர் ரோமாபுரியின் 'பிராமண' குலத்தவர் என்று கொள்ளலாம். நாட்டின் முடிசூடா மன்னனை சதியால் கொலை செய்தல் பிரமகத்தி என்ற பழிக்கு இட்டுச் செல்லும்.

பூட்டானுக்கும் 'பிலிப்பை' என்ற இரண்டு வரலாற்று முக்கியத்துவம் படைத்த தலங்களுக்கும் அதிக ஒற்றுமை இருப்பதாகத்தெரியவில்லை

ஒன்று தான் கண்முன் காணப்படுகிறது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த அப்பாவி மக்களை ஈனஇரக்கமின்றிக் கொலைசெய்த அரசு, தன்னை எதிர்த்துப் போராடி, பயங்கரவாதிகள் என்ற பழிக்கிலக்காகிய போதும் அவர்களின் பிரதிநிதிகளுடன் உண்டுகுடித்துப் பேச்சுப்பரிமாறுகிறதே!

எங்கள் சமூகத்தவர் அனைவரை இழந்தோம்; எங்கள் வீரப்போரை முறியடிக்க வந்த அரசின் ராணுவத்தில் பலரை நீங்கள் இழந்தீர்கள்; எப்பக்கத்தின் பழி அதிகம்? விடுதலைவீரர்கள் எதிர்த்துப் போராடும் ராணுவத்தைக் கொல்வதில் பழி ஏது?

இவ்வாறு சிந்தித்துச் செயலாற்றும் தமிழ் தீவிரவாத இளைஞர் திம்புவில் தங்கள் தோழரின், தமிழ் அப்பாவிமக்களின் - ஆண், பெண் குழந்தை- ஆவியைக் காண்பது இயற்கை.

இருப்பினும் பாரதத்தின் சமாதானப்பெருமுயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கலாகாதென்றகாரணத்தால் பழிக்குப்பழிவாங்கும் மனோபாவம் தூரநாடாகிய பூட்டானில் தலைதூக்கவில்லை.

அந்தஅளவில் போர்வீரர்கள் அரசியல் வாதிகளாக மாறும் வாய்ப்பு உண்டு. துப்பாக்கியால் ஏற்பட்ட போர்நிறுத்தம் துப்பாக்கி உறைக்குள் திரும்புவதற்கு இட்டுச் செல்லவேண்டும்.

இதுகாறும் ஏமாற்றத்தில் ஆட்சிநடத்திய அரசு சில்லறைராஜதந்திரத்தைக் கைவிட்டு, கபடநாடகங்களில் காலங்கழிக்காது தமிழ் மக்களுக்கு பிராந்திய அடிப்படையில் உண்மைச் சுதந்திரம் வழங்கமுன்வர வேண்டும்.

தங்கள் சிரேஷ்ட அரசியல்தலைவர்களை சமாதான வாழ்வென்று அடிமைத்தனத்துக்கு நீண்டகால எல்லை அளித்த பொதுமக்களை நம்பிக்கெட்டோமென்ற மனோநிலையே இன்றைய இளைஞரின் ஆயுதப்போருக்கு அடிக்கல் இட்டது

எனவே சமாதானத்துக்கு திரும்புவது என்ற பேச்சுக்கு இடமிராது. சமாதானத்துக்கு முன்னேறுவதே இளைஞரின் நோக்கம்: இதுகாறும் அரசியலில் ஈடுபட்ட பழந்தலைவர்கள் இன்றைய விரக்திநிலையில் அதனை மறுக்க உடன்படார்.

தமிழ் மக்கள் தாம் வாழும் நாட்டைக் காண ஒரு குறிப்பிட்ட சுபமுகூர்த்தம் உண்டென்று நினைப்பது தவறு.

அவுஸ்திரேலியாவுக்கு, கனடாவுக்கு, அமெரிக்காவுக்கு, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு படையெடுப்பவர்கள் எடுக்கட்டும்.

திரும்பிவரும்போது எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினில் சக்தி பிறப்பதைக் கண்டு நிச்சயம் பரவசமடைவார்கள்.

### 38 வருட சேவையின் பின் ஓய்வுபெற்றார்

(கரவெட்டி)

கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலய அதிபர் திரு. மு. வேலுப்பிள்ளை தமது 60-வது வயதில் 38 வருட கல்விப்பணியாற்றிய பின் ஓய்வு பெற்றார்.

சமூகநலப் பணிகளில் ஈடுபாடுமிக்க இவர், கிராமோதைய சபைத் தலைவராகவும் இருந்து கரவெட்டி தபாலக விழிப்புக்குழுச் செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு சமாதான சபையின் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். (ஸ)

## மந்திகை ஆஸ்பத்திரிக்குறைகள்
# அமைச்சருக்கு புகார்

(கரவெட்டி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் பாரிய குறைபாடுகளினால் இவ்வைத்தியசாலை நோயாளர்கள் பெரும் அல்லற்பட்டு வருவதாகவும், நோயாளிகளின் கஷ்டங்களை நீக்க அவசர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு வட-இலங்கைப்பண்பாட்டுக் கழகச் செயலாளரும் முன்னாள் கிராமோதய சபைத் தலைவருமான திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவை அவசரமாகக் கேட்டுள்ளார்.

இவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி இல்லை. குழந்தை வைத்திய நிபுணரே பதில்மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றார். சுகாதார வைத்திய அதிகாரி இல்லை. மருத்துவ அதிகாரி ஒருவரே பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றார்.

மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு பிரதம லிகிதர் இல்லை. அதேபோல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் பிரதம லிகிதர் இல்லை. நிரந்தர மேற்றன் இல்லை. மருத்துவதாதியொருவரே மேற்றனின் கடமைகளையும் கவனித்து வருகின்றார். மருத்துவ தாதிகள் பற்றாக்குறையாகவுள்ளனர். மருத்துவ மாதுகளும் பற்றாக்குறையாவுள்ளனர்.

மருத்துவ அதிகாரிகள் 1975ம் ஆண்டு 12 பேர் கடமையாற்றியுள்ளனர், எனினும் தற்போது ஏழுமருத்துவ அதிகாரிகள் கடமையாற்ற வேண்டியிருந்தும் மூன்று பேர் மாத்திரமே கடமையாற்றுகின்றனர். மருத்துவ அதிகாரிகள் பற்றாக்குறையால் நாள்தோறும் வெளிநோயாளர் பகுதிக்கு சிகிச்சைக்காகவரும் நோயாளிகள் நிரம்பி வழிவதுடன் பெருங்கஷ்டத்தையும் அடைந்துவருகின்றனர்.

ஆய்வுகூடத்தில் கடமையாற்றும் ஐவரில் இருவருக்கு இடமாற்றம் கிடைத்தது. ஆனால் அவர்களுக்குப் பதிலாக ஆய்வுகூட ஊழியர்கள் இங்கு அனுப்பப்படவில்லை, இதனால் இடமாற்றம் கிடைத்தவர்கள் புதிய இடங்களுக்குச் செல்லமுடியாதுள்ளது. இவர்கள் புகிய இடங்களுக்கு செல்லாதபடியினால் அவர்களது இரண்டுமாதச் சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளது

இங்கு 7 மருந்தாளர்கள் கடமையாற்ற வேண்டியிருந்தும் ஐவர் கடமையாற்றுகின்றனர். ஒருவர் மருந்துக் களஞ்சியத்திற்கும் இன்னொருவர் சத்திர சிகிச்சை மருந்துப் பகுதிக்கும் மற்றொருவர் உள்ளக மருந்தகத்திற்கும் பொறுப்பாக உள்ளனர். ஒருவர் வெளிநாடு சென்றுவிட்டார். ஐந்துபேர் கடமையாற்ற வேண்டிய வெளிநோயாளர் பகுதி மருந்தகத்தில் ஒருவர் மாத்திரமே கடமையாற்றுகின்றார். வெளிநோயாளர் பகுதியில் கடமையாற்றுபவர் தவிர்ந்த மூவருக்கும் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளதாகவும் தெரிகிறது.

பருத்தித்துறை, உடுப்பிட்டி, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய நான்கு தேர்தற்தொகுதி மக்களுக்கும் சேவையாற்றவேண்டிய இம் மந்திகை வைத்தியசாலையில் சகல விசேட வைத்திய நிபுணர்கள் இருந்தும் மேற்கூறப்பட்ட குறைபாடுகளினால் இவ்விசேட வைத்திய நிபுணர்களின் முழுமையான சேவைகளை நோயாளிகள் பெறமுடியாதிருப்பதாகக் கவலைகொள்கின்றார்கள்.

இக்குறைபாடுகள் பற்றி யாழ். சுகாதார சேவைத் திணைக்களத்தின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே இதுவிடயத்தில் தாங்கள் அதிக அக்கறை எடுத்து இக்குறைபாடுகளை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நல்லூர் பிரிவு——————

## சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைக்கு புதிய தலைமையகம்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் நல்லூர் பிரிவு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவின் நல்லூர் பிரிவுத் தலைமையகம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இத்தலைமையகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

வடபகுதியில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் முதலுதவிச் சேவைகள் இத்தலைமையகத்தினூடாக மேலும் விரிவு படுத்தப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திறப்பு விழாவில் சுமார் 100க்குமதிகமான சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

இப்படைப் பிரிவின் வடபகுதித் தளபதி டாக்டர் ஈ. பி. இராசையா தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவில் இதுவரைகாலமும் சிறந்த பணியாற்றியவர்களும் இவ்வைபவத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

இத்துடன் இப்படைப் பிரிவின் முதலுதவிப் பெட்டிகள் பொது ஸ்தாபனங்கள் பலவற்றுக்கும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (கி)

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் சகஸ்ர சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும்.

18ம் திகதி ஆரம்பமாகும் கதிர்காமம் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் சந்நிதி முருகனை கதிர்காமத்துக்கு வழி அனுப்பி வைக்கும் 'வேல் திருவிழா' வும் அன்றைய தினமே இடபறும்.

பின்னர் சமக அர்ச்ச...
யும் முருகன் உலாக்காட்...
யும் இடம்பெ...

### ஆடி அமாவாசை:
## கீரிமலை சிவன் கோவிலில் விசேஷ ஏற்பாடுகள்

[கீரிமலை]

ஆடி அமாவாசை அனுஷ்டிப்பவர்களின் நலன்கருதி கீரிமலை சிவன் தேவஸ்தானம் இன்று செவ்வாய்க்கிழமை விசேஷ ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக தேவஸ்தானப் பிரதமகுரு பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார்:

இன்றிரவு கீரிமலைசிவநெறிக் கழகம் ஆடி அமாவாசையையொட்டி பலசமய நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்துள்ளது

இன்றுமுழுவதும் கீரிமலைக்கு விசேட போக்குவரத்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### உள்ளம் கொடுத்தார் மீட்பரோ

அள்ளித் தருஞ்செல்வம் கேட்க உணவந் தருகுற்றார்
மெள்ள மறந்தார் விரும்பிய யாவும்! நினைக்க
வொட்டார்
கொள்ளைக் குறுநகையாலே; குமரா எனக்குழைந்தே
உள்ளம் கொடுத்தார்! மீட்பரோ மாவைக்
கோருமுருகா!

—க. சச்சிதானந்தன்

● இன்று மாவை முருகன் ரதோற்சவம்

## புனித வின்சென்...
## நாவந்துறை...
## ஆண்டு நி...

நாவாந்துறை ''புனித வின்சென் டி பால்'' ச... யின் 75-வது ஆண்டு நிறை... விழா எதிர்வரு 19-ம் தி... முதல் 21-ம் திகதி வ... கொண்டாடப்படவுள்ளது.

மேற்படிச் சபை 1910... ஆண்டு ஜூலைமாதம் 19... திகதி, திருப்பலிப் பூசையி... பின் அப்போ... நாவாந்... றையில் பங்கு தந்தையா... சேவை செ... இத்தா... நரட்டைச் சேர்ந்த வ... பிதா. ஈ. ரெ அடிகளா... ஆரம்பித்து வைத்தார்.

ஆண்டவனின் அன்பு... பணிக்கென அர்ப்பணித்... அவரின் சேவையிலே நிறை... கொண்டு அயலில் ஆ... வனைக் கண்டு ஆன்மீகப... செய்து, அதோடு தர்... கிரியைகளாலிறைபோ... அரவணைத்து இறைவனு... சாட்சி பக... இச்சபை... நாவாந்துறைபங்கில் ஊ... றப்பட்டு 75 வருடங்கள் நி... வைக் கண்டுள்ளது.

'புனிதவின்சென் டி போ... சபையின், ... ாப்புக்கவை... 1979ம் ஆண்டு நாவாந்து... யில் பங்குத்தந்தையாக இ... ந்த அருட்திருஅர். எம்.... நேசநாயகம் அடிகளார் புன... மரியாள்பத்தி, புனித நீ... லார்பத்தி எனரு சபைக... கப் பிரித்து வேலைசெய்ய வ... வகுத்தார் இவ்விரு ச... களும் ஒன்றிந்து எழு... மிக்க பெருவிழாவாக 75... ஆண்டு நிறைவு விழாவை... கொண்டாடுகின்றன.

எதிர்வரும் 19-ம் தி... வெள்ளிக்கிழமை மாலை... மணிக்கு ஆராதனை... ளும், திருப்பலிப் பூசை... னும் விழா ஆரம்பமாகி... றது.

20-ம் திகதி சனிக்கிழமை... காலை 9-மணி கருத்தரங்... விளக்கவுரை, நமணி ஆ... தனைகள் நடைபெறும்.

அதிஉ...
சோ...
ZNP இது பநாக்கு. இ...
...யிர் போ...
பொஸ்பர...
ஆவற்றுடன்...
ப...
பேசி, பட்டா...
திராட்சை, காய், வெ...
A PRODUCT...
LEFFINGWELL
A BUSINES...
UNIROYAL CHEM... UNIROYAL

# த வின்சென் டி போல் சபை ாவாந்துறையில் 75-வது ஆண்டு நிறைவு விழா

ாவாந்துறை "புனித ன் டி போல்" சபை 5-வது ஆண்டு நிறைவு எதிர்வரும் 19-ம் திகதி 21-ம் திகதி வரை டாடப்படவுள்ளது.
படிச் சபையை 1910-ம் ஜூலை மாதம் 19-ம் திருப்பலிப் பூசையின் அப்போது, நாவாந்து பங்குத் தந்தையாக செய்த, இத்தாலி டச் சேர்ந்த வண. ஈ. ஜென் அடிகளார் ித்து வைத்தார்.
டவனின் அன்புப் கென அர்ப்பணித்து சேவையிலே நிறைவு டு அயலவரில் ஆண்ட கண்டு ஆன்மீகபணி , அத்தோடு தர்மக் களாக இறைபோக்கி த்து இறைவனுக்கு பகரும் இச்சபை, ந்துறைப் பங்கில் ஊன் டு 75 வருடங்கள் நிறை கண்டுள்ளது.
ிதவின் சென் டி போல்' ின், யாப்புக்கமைய ஆண்டு நாவாந்துறை ங்குத்தந்தையாக இரு ருட்திரு. ஆர். எம். ஜி. ாயகம் அடிகளார் புனித ள்பத்தி, புனித நீக்கி ந்தி என இரு சபைகளா ித்து சேவைசெய்ய வழி ாார் இவ்விரு சபை ஒன்றிணைந்து எழுச்சி பெருவிழாவாக 75-ம் நிறைவு விழாவைக் டாடுகின்றன.
ிவரும் 19-ம் திகதி ிக்கிழமை மாலை 5 கு ஆரம்ப ஆராதனை திருப்பலி பூசையுட விழா ஆரம்பமாகின்
திகதி சனிக்கிழமை 9-மணிக்கு கருத்தரங்கு வுரை, திருமணி ஆரா ர் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு நவநாள் திருப்பலியும், நோயாளரை ஆசீர்வதித்தலும் நடைபெறும்.
21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணிக்கு யாழ் ஆயரி தலைமையில் கூட்டுத் திருப்பலியும், 9-மணிக்கு பொதுக்கூட்டமும் நடைபெறும்
இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும், நாவாந்துறை பங்குத் தந்தை அருட் திரு. பீ. எம். இம்மனுவேலும், விழாக்குழுச் செயலாளர்கள் திரு. ..யா. சந்தியோகும், திரு. எம். மரியதாஸும் கவனித்து வருகின்றனர்கள். (வி)

ம் இடம்பெறும்.
னர் சண்முக அர்ச்சனை ருகன் வீதி உலாக்காட்சி டம்பெறும்.

## பண்ணிசை வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வதிரி பூவற்கரை பிள்ளையார் கோவிலில் பண்ணிசை வழிபாட்டு வகுப்பை வதிரி தமிழ் மன்றம், கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் சங்கம் ஆகியன ஒருங்கிணைந்து ஆரம்பித்துள்ளன.

இப்பண்ணிசை வகுப்பை சங்கீத ஆசிரியர் திரு சி. நவரத்தினம் ஆரம்பித்து வைத்தார். இவ்வைபவத்தில் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி, ஆசிரியர் திரு. கோ. லோகநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## யூகோஸ்லாவிய வர்த்தக தூதுக்குழு இலங்கை வருகிறது!

(கொழும்பு)

யூகோஸ்லாவிய வர்த்தகக் குழுவொன்று இம்மாதம் 20ம் திகதி இலங்கை வருகிறது.
அந்த நாட்டின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ஸி. பொசானியோ தலைமையில் வரும் இத்தூதுக் குழுவினர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, மற்றும் சில சிரேஷ்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.
பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இவர்கள் இலங்கைத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விவட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.
கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. த. வ. தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இப்போட்டிக்கான ஏற்பாடுகளை வினையாட்டுக்குழுச் செயலாளர் திரு வி. கே. கணபதிப்பிள்ளை கவனித்து வருகிறார்.

## அப்பர் இல்லம் முதலிடம்

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் திரு. க. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக சங்கீத வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. கணபதிப்பிள்ளை கலந்து கொண்டார்.

இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் அப்பர் இல்லம் 146 புள்ளிகளை பெற்று முதலாமிடத்தையும், சம்பந்தர் இல்லம் 145 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், சுந்தரர் இல்லம் 142 புள்ளிகளைபெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன. (எ)

## முதலாவது பரிசளிப்பு விழா

(உடுவில்)

சங்குவேலி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் இவ்வாண்டு முதன்முதலாக பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் தலைமையில் இம்மாதம் 19-ம் திகதி காலை நடைபெறவிருக்கும் பரிசளிப்பு விழாவில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு செ. தனஞ்செயன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

## சங்கீத டிப்ளோமா ஆசிரியர்க்கு—— பட்டதாரி சம்பளம் வழங்க கல்வியமைச்சு இணக்கம்!

### மகாசிவம் கூறுகிறார்

(புலோலி)

"வடமராட்சிப் பிரதேசம் அண்மைக்காலத்தில் கல்வி நடவடிக்கைகளில் பெரும் பாதிப்புற்ற பிரதேசமாகும். கல்விக்காக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திய பிரதேசமும் இதுதான். இவ்வாறான பிரதேசத்தில் கல்விக்காக தொழிற்சங்கம் தனது சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும்"

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உடுப்பிட்டி பருத்தித்துறை கிளையின் விசேட பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் குறிப்பிட்டார். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட உபதலைவரும் உடுப்பிட்டி கிளைத் தலைவருமான திரு. சி வின்சென்ற் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய திரு. மகாசிவம் குறிப்பிட்டதாவது,

தொழிற்சங்கங்களில் பெரும் பதவிகள் வகிப்பவர்கள் நிதானத்துடனும், நீதியுடனும் சேவையாற்றவேண்டும் எந்த விதமான ஊழலுக்கும் இடமளிக்கக் கூடாது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களையடுத்து அநுராதபுரத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களின் மே, யூன் மாத சம்பளங்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது. தோட்டப் பாடசாலைகளில் பதில் அதிபர்களாக கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு நிரந்தர பதவி உயர்வு வழங்கப் படவேண்டுமெனக் கேட்டுள்ளது.

லண்டன், இந்திய பல்கலைக் கழகங்களின் சிறப்புப் பட்டதாரிகளாக இருப்போர்க்கு. தயாரத்ன கல்விக் குழுவின் சிபார்சுக்கிணங்க சிறப்புப் பட்டதாரிகளுக்கான சம்பளம் வழங்கப்படவேண்டும். தோட்டப்பாடசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்படும்போது அவர்கள் தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிய சேவையையும் கேர்த்துக் கணிக்கவேண்டும் என்ற எமது கோரிக்கைக்கு கல்வி அமைச்சு இணங்கியுள்ளது.
இலங்கைத் தமிழர் ஆசிரி சங்க நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராஜா, யாழ். மாவட்டச் செயலாளர் திரு வி. எஸ். சிவபாலசிங்கம், சிரேஷ்ட துணை நிதிச் செயலாளர் திரு. கே. சதாசிவம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## கல்விவலயத் திட்டத்தில் கல்வியில் மாற்றம் ஏற்படாது

(மாவிட்டபுரம்)

"அடுத்தாண்டுமுதல்செயல்படுத்தப்படும் கல்வி வலயத் திட்டத்தின் கீழ் கல்வியில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டுவிடாது. புதிய கல்வித்திட்டத்திற்கமையவேகல்விப்போதனை இடம் பெறும். ஆனால் ஒரு பெரிய கல்லூரியின் கீழ் பல சிறிய பாடசாலைகள் இயங்கும் வகையில் முகாமைத்துவத்தில் மட்டும் மாற்றம் ஏற்படும்.
இவ்வாறு அளவெட்டி வடக்கு அ. மி த. க. வித்தியாலய வருடாந்த பரிசளிப்பும், பெற்றார் தினமும் வித்தியாலயத்தில் கொண்டாடப்பட்டசமயம் அதில் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றிய யாழ். கல்வித்திணைக்கள கல்வியதிகாரி திரு. கே. கந்தசாமி கூறினார்.
வித்தியாலய அதிபர் திரு. ப. தளையசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மெலும் பேசுகையில் கூறியதாவது
புதிய கல்வித்திட்டம்மூலம் மாணவர்கள் அதிக பயனைப் பெறமுடிகிறது: தாம் கற்பவற்றை விளங்கிக்கற்பதற்கு புதிய கல்வித்திட்டம் வழி வகுக்கிறது. இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு ஆசிரியர்களின் பங்கு அவசியமானது. வெளிமாவட்டங்களில் கடமைபுரியும்போது பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுவதால் கல்வியில் முழுக்கவனமும் செலுத்தமுடியாத நிலை உண்டு ஆனால் ஆசிரியர்கள் சொந்த மாவட்டத்திற்கு வந்ததும் இப்பிரச்சனைகள் இல்லாமல் போகின்றன. ஆகவே கல்விப்போதனையில் அவர்கள் முழுக்கவனத்தையும்செலுத்த வேண்டும்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். அவர் உரையாற்றும்போது மாணவர்களிடையே ஒழுக்கம் குருபக்தி என்பன சிறந்து விளங்கினால் தான் அவர்கள் கல்வியில் முன்னேறமுடியும் என்றார்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. பீ. சிவஞானசுந்தரம், பண்டிதர் க. நாகலிங்கம், புலவர் மு. திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றினர்,

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.


துி உச்ச விளைச்சலுக்கு
சார்பா-ஸ்பிரே®
பாவியுங்கள்
இது பல்நோக்கு திரவம். இலையினூடாக செயலாற்றும் வளமாக்கி.
பயிர் போஷாக்கு:- நாகம் 2% (Zn) நைதரசன் 10% (N) பொஸ்பரசு 12% P 2 O 5. கந்தகம் 1% (S) அடங்கியது.
நியுட்ருபோஸ் N, நியுட்ருபோஸ் K, ஆகியவற்றுடன் கலந்துதெளிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
பயிர்கள்:- நெல் மற்றும் சிறுதானியப் பயிர்கள், போஞ்சி, பட்டாணி, கோவா, பூ கோவா, கரட், உருளைக்கிழங்கு, ..சை, மிளகாய், வெங்காயம், பூச்செடிகள் ஆகியவற்றிற்கு உகந்தது.




மி.லி. 500
ரூ.60.00
ANGLO-ASIAN FERTILISERS
அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட், சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.
A PRODUCT OF ..INGWELL .. BUSINESS OF ..AL CHEMICAL UNIROYAL
R யுனிரோயல் டிரேட் மார்க்:
TEAM - 1204

காங்கேசன் சிமெந்து ஆலைக்கு——————

# தேவையான களிமண் கட்டுவன் வறுத்தலைவிளான் பகுதியில் இருக்கிறது!

[மாவிட்டபுரம்] காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் வறுத்தலைவிளான், கட்டுவன் போன்ற இடங்களிலுள்ள குளங்களில் காணப்படும் களிமண் சிமெந்து உற்பத்திக்கு உபயோகப் படுத்தப்படவுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் சிமெந்து உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படும் முருங்கன் களிமண் போன்று பசைத்தன்மையுடன் கூடிய களிமண் வறுத்தலைவிளானிலுள்ள குளமொன்றில் காணப்பட்டதையடுத்து சிமெந்து ஆலைத் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் இக்களிமண் சிமெந்து உற்பத்திக்கு உபயோகிக்கமுடியும் எனத் அறியவந்ததால் மேற்படி குளத்தில் களிமண்ணை அகழ்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வறுத்தலைவிளான் குளத்தில் 1000 தொன் களிமண் இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படுகிறது. இதேபோன்று களிமண் கட்டுவனில் உள்ள குளமொன்றிலும் காணப்படுவதால் அங்கிருந்து 2000 தொன் களிமண்ணை அகழ்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இணக்க சபை

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்தின் நடப்பு வருடத் தலைவராக திரு கா. நல்லதம்பி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக மு. தவராசாவும், பொருளாளராக க. கண்ணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நிலையம் அமைந்துள்ள பகுதியில் வாழும் மக்களின் நன்மை கருதி திரு. கா. திருஞானம் தலைமையில் ஓர் இணக்க சபையும் திரு. செ. இரத்தினசிங்கம் தலைமையில் திடீர் விசாரணைக்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## கனரக இரும்புத் தகடுகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மில் ஒழுங்கையிலுள்ள இரும்புத் தொழிற்சாலை ஒன்றுக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நேரத்தில் பிரவேசித்த இளைஞர் கோஷ்டியொன்று நெல் அவிக்கும் பொய்லர் செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த 7 கனரக உரும்புத் தகடுகளைப் பலவந்தமாக எடுத்துச் சென்றுள்ளது.

சுமார் 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இந்த இரும்புத் தகடுகளில் மில் உரிமையாளருக்குச் சொந்தமான இரு தகடுகள்போக ஏனையவை பொய்லர் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தவையாம்.

## உடுப்பிட்டி வட்டார பாடசாலை

# இசை, நடன, நாடக போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இசை, நடன, நாடகப் போட்டிகளில் முதலிடம் பெற்ற முடிவுகள் வருமாறு:-

சிரேஷ்ட பிரிவு:- கர்நாடக இசை (தனி) ப. பவானி [கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி], கிராமிய இசை (குழு) (கர. ஞானசாரியார்), ஆண் கிராமிய இசை [தனி] கு. மனோகரன் [உடுப்பிட்டி அ. மி. க], கர்நாடகம் [தனி] பா. பிரபாகரன் (நெல்லியடி ம. ம. வி), நடனம் (பரதம்) வி. தாரணி [நெல்லியடி ம. ம. வி], நாடகம் உடுப்பிட்டு மகன்ர் கல்லூரி.

கனிஷ்ட பிரிவு:- கர்நாடக இசை ந. ஜெயதர்சினி (நெல்லியடி ம. ம. வி) குழு உடுப்பிட்டி மகளிர், கிராமியம் [குழு] கம்பர்மலை அ. த. க. பா. வல்வெட்டித்துறை ஆண் இசை புதிய ஆக்கம் [குழு] ஞானசாரியார், நாடகம் திரு இருதயக் கல்லூரி.

ஆரம்ப பிரிவு:- (தனி) புதிய ஆக்கம் வே. வரலட்சுமி (கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாசாலை), கிராமியம் கே. பான்சி (திருஇருதயா), கர்நாடகம் க. பிருந்திகா [பொலிகண்டி இந்து த. க. வித்], குழு புதிய ஆக்கம் விக்னேஸ்வரா, கர்நாடகம் நெல்லியடி மெ. மி. த. க.

கலவன் குழு புதிய ஆக்கம் (திருஇருதயக் கல்லூரி), நடனம் [பரதம்-தனி] நா. அனுராதா (நெல்லியடி மெ. மி த. க.): குழு பரதம் [நெல்லியடி மெ. மி த க], ஆண் [தனி] க. கர்ணன் [கரணவாய் வேதாரணி], நாடகம் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி. [க]

# "பொருளாதார வளர்ச்சிக்கு பனைவளம் பெருகவேண்டும்"

(மாவிட்டபுரம்)

"சுதந்திரம் வேண்டுமெனப் போராடும் நாம் எமது பொருளாதர சுதந்திரத்திலும் அக்கறை கொள்ள வேண்டும். எமது பொருளாதார விருத்திக்கு பனம பொருட்கள் பெரிதும் உதவமுடியுமாதலால் பனை வளத்தில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்"

இவ்வாறு சர்வதேச இளைஞர் ஆண்டினை முன்னிட்டு வீமன்காமம் மகாவித்தியாலயமும், பனம்பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடத்தும் நான்குநாள் பனம்பொருள் கண்காட்சியை திறந்து வைத்துப்பேசிய தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகராசா கூறினர்.

வித்தியாலயஅதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தை காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பி. சிவஞானசுந்தரம். பனை அபிவிருத்திச் சபை பிரதம விகிதர் திரு. த. இராசரத்தினம் ஆகியோர் டங்களை விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

சிவமகராசா தொடர்ந்து பேசுகையில் 'பனம்பொருள் அபிவிருத்திக்கும், உற்பத்திக்கும் தமிழகம் எமக்கு வழிகாட்டியாக திகழ்ந்து வருவதால் அதனைப்பின்பற்றி இத்துறையில் நாம் பெரிதும் பயனடைய வேண்டும்" என்றும் கூறினர்.

விமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு மு. சிவராசா தமதுரையில்: பனம் பொருட்கள் தேடுவாரற்றுக் கிடந்தகாலம்போய் இன்று அவற்றுக்கு பெருமதிப்புக் கிடைத்துள்ளது. பல்கலைக்கழகமட்டத்தில்கூட இதுபற்றி ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றன. பனம்பொருட்களைவெளிநாடுகளுக்கு அனுப்பி அந்நிய செலாவணியைப் பெறமுடிகிறது. எமது பாரம்பரிய பொருட்களான பனம்பொருட் இன்றைய நவீன உலகில் பெரிதும் பயன்படுகின்றன என்றார்.

இதையடுத்து பனம்பொருட்கள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகராசா உட்பட மற்றும் இப்பகுதிப் பிரமுகர்களும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் பேசிய பனை அபிவிருத்திச்சபை இயக்குநர் திரு எஸ். பாலசிங்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பனம்பொருள் அபிவிருத்தியில் அதிக கவனம் எடுக்க வேண்டுமெனவும் அதற்குவேண்டிய ஆலோசனைகளை பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் தந்துதவுவார்கள் எனவும் கூறினர். பனம்பான உற்பத்தியையும் இவர் அறிமுகம் செய்துவைத்தார்.

கண்காட்சி தொடர்பான அலங்காரங்கள் யாவும் பனம் பொருட்களாலேயே செய்யப்பட்டிருந்ததுடன் கண்காட்சி ஆரம்ப வைபவத்திற்கு வந்த பிரமுகர்களுக்கு பனம்பொருட்களால் செய்யப்பட்ட மாலைகளே அணியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தபாலகம் மீண்டும் திறக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

கடந்த ஜனவரி மாதம் 25-ம் திகதியன்று சுமார் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் ரொக்கப்பணமும் இனந்தெரியாதவர்களினால்கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து மூடப்பட்ட பண்டத்தரிப்பு தபால் அலுவலகம் கடந்த 12-ம் திகதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. தபால் அலுவலக விழிப்புக்குழுவும் தபால் அதிபரும் மேற்கொண்ட முயற்சியினால் இது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது 20 ரூபாவுக்கு உட்பட்ட முத்திரை விற்பனை, கடிதங்களை பதிவுசெய்தல், தொலைபேசி சேவை ஆகியன மாத்திரமே இங்கு நடைபெற்று வருகின்றது.

## மெய்வல்லுநர் போட்டி

[கிளிநொச்சி]

வட்டக்கச்சி மகாவித்தியாலய இல்லங்களிற்கிடையேயான வருடாந்த மெல்வல்லுநர் போட்டிகள் மேற்படி வித்தியாலய விளையாட்டரங்கில் அதிபர் வை வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கிளிநொசசி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் பரிசுல்களையும் வழங்கினார்.

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய அதிபர் பொன். சபாபதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# சர்வோதய இயக்கம் அகிம்சை வழியில் சேவை புரிகிறது

## தலைவர் ஆரியரட்ண கூறுகிறார்

(வவனியா)

"சர்வோதய இயக்கம் எந்தவொரு பக்கமும் சாராது அகிம்சை, அன்பு கோட்பாட்டுடன் இன்னும் சேவை புரிந்து வருகின்றது.

இந்நாட்டில் எத்தனையோ கஷ்டமான காலகட்டங்கள் வந்தபோதும் எமது தொண்டர்கள் சிறந்த பணி ஆற்றியுள்ளார்கள். 1971-ம் ஆண்டு 361 கிராமங்களில் விஸ்தரிக்கப்பட்ட எமது இயக்கம் இன்று 8 ஆயிரம் கிராமங்களில் உள்ளது" என்று சர்வோதய தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ண வவனியாவில் தெரிவித்தார்.

வவனியா—கண்டி வீதியினுள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

வவனியா மாவட்ட இணைப்பாளர் திரு. க. கதிரமலை தலைமையில் வவனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட சர்வோதய தொண்டர்கள் மத்தியில் சர்வோதய தலைவர் பேசினர்.

சுமார் 200 பேர் இந்தவைபவத்தில் கலந்துகொண்டனர்.

ஆரியரட்ண மேலும் தெரிவித்ததாவது:-

"எத்தனையோ துன்பங்களுக்கு மத்தியில் எமது வடபகுதி தொண்டர்கள் சிறந்த சேவை ஆற்றியுள்ளார்கள். இவர்களுக்கு நன்றிகூறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"இந்நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் மனிதர்கள் என்ற ரீதியில்தான் உதவி செய்து வருகின்றோம்.

"ஒவ்வொருவரும் பயமின்றி சுதந்திர புருசர்களாகவே வாழ விரும்புகின்றனர்.

"நாம் அகிம்சை வாதிகள்" எம்மிடம் ஆயுதமில்லை சர்வோதய தொண்டர்கள் இங்கு எந்தப் பகுதியிலும் சென்று வரலாம் பயப்பட; வேண்டியதில்லை எமது இயக்கம் ஒரு சுதந்திர தொண்டர் ஸ்தாபனமாகும்" என்றார்.

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 1. (1985-7-16) செவ்வாய்
திதி: சதுர்த்தசி பின்இரவு வரை
நக்ஷத்திரம்: மிருகசிரிடம் காலை 7 33ன்மேல்திருவாதிரை

மேடம்: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தியுண்டு செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

இடபம்: எதிர்பாராதவகை பொருள் விரயமாகும், வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும், மனத்திடம் வேண்டும்.

மிதுனம்: அன்னியவாசம் அமைதிக்கு உலைவைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானம் வேண்டும்.

கடகம்: நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்க நேரும். பெரிய இடத்து சாவகாசம் செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வுண்டு.

சிங்கம்: வெளிபிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம், வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று.

கன்னி; மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு, மனம போல்யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உவினர் கொண்டாட்டமும் உண்டு

துலாம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம், தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும்.

விருச்சிகம்: தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும் நண்பர்களே காலைவாரிவிடக் கூடும்

தனுசு: நலன்தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும், ஒடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு, பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்,

மகரம்: வியாபாரத்தில் நஷ்டத்திற்கு இடமுண்டு, தொழில் துறையில் தொல்லைகள் தோன்றக் கூடும், அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

கும்பம்: பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வ நம்பிக்கையில் ஆர்வமும் ஏற்படும்.

மீனம்: இதயத்தில் ஏக்கம் இன்று தணியும், தேடிய பொருள் காலடியில் சரணடையும், செல்வாக்கும் பெருகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மானிப்பாயில் 13 பாடசாலைகள் தரமுயர்வு

[உடுவில்]

கல்வி அமைச்சின் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 1986-ம் ஆண்டு மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் 13 பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன

மானிப்பாய், சுன்னாகம், உடுவில், நவாலி ஆகிய நான்கு வலயங்களிலும் உள்ள ஐம்பது பாடசாலைகளில் 1986-ம் ஆண்டில் 13 பாடசாலைகளும் 1987 ம் ஆண்டில் 15 பாடசாலைகளும் தரமுயர்த்தப்படவுள்ளன.

இதன்படி மானிப்பாய் வலயத்தில் 3 பாடசாலைகள், சுன்னாகம் வலயத்தில் 5 பாடசாலைகள், உடுவில் வலயத்தில் 3 பாடசாலைகள், நவாலி வலயத்தில் 2 பாடசாலைகள் அடுத்த ஆண்டு தரமுயர்த்தப்படவுள்ளன (க)

விற்பனையாகின்றது
பாலபோதினி
அரிவரிப் புத்தகம்
வண்ணச் சித்திரப் பதிப்பு
சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை
4467

# ஒழுங்குபடுத்தப்பெற்ற நிர்வாகச் சிறப்புப்பெற்றது சோழமன்னன் ஆட்சி

தொகுப்பு:
**கனகசபாபதி நாகேஸ்வரன்,**
துணை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



[கீரிமலைச் சிவநெறிக் கழகத்தினர் இராஜராஜ சோழன் ஆயிரம் ஆண்டு விழாவினைக் குறிக்குமுகமாகத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அறிஞர் த. சண்முகசுந்தரம் அவர்களது தலைமையில் எடுத்த விழாவில் இடம்பெற்ற உரையரங்கின் தொகுப்பு. இத்தொகுப்பில் முறையே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணன் அவர்கள், தமிழ்த்துறைப் பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள், நுண்கலைத்துறைவிரிவுரையாளர் கலாநிதி கி. மௌனகுரு அவர்கள், வடமொழித்துறைத் தலைவர் திரு. வி. சிவசாமி எம். ஏ. அவர்கள், வரலாற்றுத்துறைத் தலைவர், கலாநிதி சி. க. சிற்றம்பலம் ஆகியோரது உரைகளின் சுருக்கம் இடம்பெறுகின்றன]

பேரரசுத் தத்துவ நிலைப் பட்டதோர் ஆட்சியின் இயல்புகளால் சிறப்புக்கொண்டது சோழப் பெருமன்னராட்சி. ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகத்தின் சிறப்பினால் சகல துறைகளிலும் பெருவளர்ச்சி நிலைகண்ட சாம்ராஜ்யம் சோழ சாம்ராச்சியம். சமய வளர்ச்சியினதும் இலக்கிய வளர்ச்சியினதும் உச்சக்கட்டம் சோழப் பெருமன்னர் காலத்தில் நிகழுகின்றது. திருக்கோயில் மரபுச் சிறப்புக்களாலும் நித்திய நைமித்தியங்களுக்கென வழங்கப்பட்ட கொடைகளாலும் உருவான மரபுகள் இன்றும் பேணப்படும் நிலைக்கு வித்திட்ட முதன்மைநிலை கொண்டது சோழர்களது பக்தி மேம்பாடு. சாசன இலக்கியங்களினடியாகப் பெறப்படும் தகவல்களாலும், செப்பேட்டுக் குறிப்புக்களாலும்; பொறிப்புக்களாலும் முழுமையான கலை, அரசியல், சமய பண்பாட்டு வரலாறுகளை அறியமுடிகிறது.

## சமய பக்தன்

இராஜராஜன் பெரும் சமய பக்தன். சிவனது திருவடி மறவாத சிந்தையன். தஞ்சைப் பெருவுடையார் கோவில் சிவநினைப்பினை மேலும் பரப்ப எடுத்த பக்திப் பின்னணியின் எச்சம்; நிலையான சாதனம்- இக் கோயிலின் விமானம் மிகவும் கலைத்துவமிக்கதொன்றாகும். கலை, சமயம், தத்துவம் எனத் தகும் மூவிணைப்பும் கொண்ட கலாபீடம். கட்டடக் கலையின் சிறப்புக்களெல்லாம் ஒருங்கு திரண்டு மிளிரும் கலைக்கோயில். இராஜராஜனின் ஒப்பீடற்ற திருப்பணி - இறைபணி பிருகதீஸ்வரர் கோயில் என வழங்கப்படும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் நிருமாணமாகும்.

## சோழரின் வீரம்

கலை நயமிளிரும் திருவுருவங்களையெல்லாம் அமைத்துக் கலையினைப் பேணிய பெருமன்னன் இராஜராஜன். அட்டவீரட்டச் சிற்பங்கள் கொண்ட தெய்வீகத் திருத்தலம் தஞ்சை இராஜராஜேஸ்வரம். இவ்வாலயத்தில் ஒவ்வொரு கோஷ்டங்களிலும் நேர்த்தியாக அமைக்கப்பட்ட திருவுருவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் பிட்ஷாடனர், வீரபத்திரர் தெற்குச் சுவர்களிலும், அர்த்தநாரீஸ்வரர் வடக்குச் சுவரிலும், லிங்கோற்பவர் கிழக்குச் சுவரிலும் இடம்பெற்றிருக்கின்றனர். இவ்வாலயத்திலமைக்கப்பட்டுள்ள திரிபுராந்தக வடிவம் சோழரின் வீரத்திற்கு அறிகுறி இதனுடன் மார்க்கண்டேயர், சிவன் வடிவம் ஆதியனவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

## கலைத்துவ நோக்கு

சோழர்களது குலதெய்வம் எனக்கொள்ளப்படத் தக்கவர் திருவாரூர்த் தியாகேசர். இதனைப்போலும் தஞ்சைப் பெருவுடையார் கோவிலிலும் தஞ்சை விடங்கன் இடம்பெற்றிருக்கின்றார். இவ்வொப்புமை விரிவாக விளங்கிக்கொள்ளப்பட வேண்டியவை. கலைத்துவ நோக்கில் அசபாநடனம் இடம்பெற்றமை குறிக்கப்படுகிறது சுத்த மத்தளம், எக்காளம் போன்ற வாத்தியங்கள் பற்றிய குறிப்புக்களுமுள. சாசனங்கள் தரும் சான்றுகளாகக் கோயில் நடைமுறைகள், பெயர்கள் இடம்பெறுவது கவனிக்கப்பட வேண்டியது. திருமேனிகள், திருவிளக்கு, திருச்சின்னங்கள், திருவமுது, திருமஞ்சனம், திருவொற்றாடை, திருப்பள்ளித்தாமம், திருப்பரிவட்டம், திருப்பாவாடை என்னும் உதாரணங்களால் அறியலாம். தீர்த்தம் குறிக்கப்படுமிடத்து 'இராஜராஜேஸ்வரமுடையார்



ஆடியருளும் நீரும்' என வழங்கப்படுகிறது ஏலரிசி, இலாமிச்சம் என்பனவும் குறிக்கப்படுவதால் ஆகம மரபுடனிணைந்த நித்திய நைமித்தியம் நடைபெற்றதெனக் கொள்ளக் கிடக்கிறது.

சோழப் பெருமன்னர்களது பிறந்ததின விழாக் கொண்டாட்டங்கள் நிகழ்த்தப்பட்டமைக்கு 13 தினங்கள் நடத்தப்படும் 'திருச்சதயத் திருவிழாவும், 9 தினங்கள் நடைபெறும் 'ஆண்டி விழா'வும் எடுத்துக்காட்டுகளாம். மேலும் தளிச் சேரிப்பெண்டுகள். வாத்தியம் வாசிப்போர், கணக்கெழுதுவோர், மடப்பள்ளிப் பணியாளர், காவலாளிகள், விளக்கேற்ற நெய்கொண்டு தருவோர், அன்றாடக்கடமை புரிவோர் முதலானோரது தரவுகள் கிடைக்கின்றன.

## ஆலயத் திருப்பணி

நடராசர் சிலையினது முதன்மையும் தத்துவ விளக்கமும் சோழர் காலத்திலேயே பெருவழக்காகின்றது மனத்துக்கு விரும்பியதொரு கலைப்படைப்பினது பிரச்சாரத்துக்குச் சோழப்பெருமன்னர்கள் - விசேடமாக இராஜராஜ சோழன் அனுசரணையாயிருந்தமையினை உணருகிறோம். அளக்கும் மரக்கால்கூட 'ஆடவல்லான்' என்ற பெயரிலே இருந்ததை அறிகிறோம். எப்பொருளுக்கும் இறைவன் பெயரிட்டு அழைத்து மனமகிழ்வு கொண்டவர்கள் சோழர்கள். அதன் தொடர்ச்சி நிலை தமிழர்களிடத்து இன்றும் பெருவழக்கிலுண்டு.

இராஜராஜனது ஆலயப் பணிகள் இரண்டு வகைகளில் இடம்பெற்றன.

I புதிய கோவிற்பணி:
II புனருத்தாரணப் பணி.

விலையுயர்ந்த ஆபரணங்களால் அணிசெய்யப்பட்ட அம்பாள் திருமேனிகளை 'உலோகமாதேவி ஈஸ்வரம்' கோயிலில் காணலாம். ஆலயப் புனருத்தாரண வகையில், பழைய வைத்தியநாதேஸ்வரர் கோயில், பதவியா இரவிகுல மாணிக்கஈஸ்வரம் என்பன புனரமைப்புச்செய்யப்பட்டன.

இராஜராஜன் ஏனைய சமய வாதிகளுக்கும் இடமளித்துச் சமயப்பொறையினைக் கொண்டிருந்தான். இது சோழப்பேரரசுத் தத்துவத்தின் பிரதானமானதொரு பண்பாயிற்று. ஸ்ரீமார விஜயோத்துங்கவர்மன் பௌத்த விகாரையை நிறுவியமை எடுத்துக்காட்டத் தக்கதொன்று. 'ஆனைமங்கலச் சாசனம். பள்ளிச் சந்தம்பற்றிக் குறிப்பிடுகிறது 'வெல்கம் வெஹர' 'இராஜராஜப் பெரும்பள்ளி' என்பனவும் கவனித்தற்குரியன.

வேதபாராயணத்தின் பொருட்டுக் கல்விச் சாலைகள் இருந்தன. அறக்கட்டளைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. திருநறுங்கொன்றைக் கல்வெட்டில் 'நுந்தாவிளக்கு' பற்றியகுறிப்பு வருகின்றது. இரு நாணயங்கள் குறிப்பிடத்தக்கன

பல்லவர் காலத்துச் சமய நெறி சோழப் பெருமன்னர் காலத்தில்- பேரரசு நிலையில் உயர்ச்சியடைந்து தொடர்ச்சி நிலைபெற்று உவந்து போற்றப்படும் பெருநெறியாகி வளர்ந்து நின்ற தன்மையினைக் காணமுடியும்.

## இலக்கிய நெறி

சோழப் பெருமன்னர் கால இலக்கியச் செறிவினைப் பேரரசுத் தத்துவத்துடன் பிணைத்துப் பெருங்காப்பிய இலக்கிய நெறி எனக் கொள்ளலாம். குலோத்துங்க சோழன் உலா, கலிங்கத்துப்பரணி என்பன தோற்றம் பெறுகின்றன இலக்கியத் தோற்றத்திற்கான சூழ்நிலை சாதகமாக அமைவதனைச் சோழர் காலத்திலே அவதானிக்கலாம் விரிவும், விசாலமும், வியாபிதமும்கொண்ட இலக்கிய ஆக்கத்திற்கு இடந்தருவதாக அமைகிறது இக்காலத்தில் பேரிலக்கியக் கொள்கைகள் தோன்றுகின்றன. இராஜராஜனது தமிழிலக்கியப் பெரும்பணி எனத்தகும் சிறப்புடைப்பணி திருமுறைத் தொகுப்புப்பணி' ஆகும். திருத்தொண்டர் புராணம் இயற்றப்பட்டது. இதற்குத் திருமுறைகள் காலாயின. இப்புராணத்திலுல் சுந்தரரது வரலாறு பரவுகிறது. பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் இடம் பெறுகிறது. அடியார் பெருமையில் உருகும் பண்பு துலங்குகிறது. சுந்தரரது நிலைநின்று பாடினார், பரவினார், பணிந்தார் என்கிறார் சேக்கிழார். பெரிய புராண இலக்கியச்சுவை பெரிது. திருமுறைகளிலுள்ள செப்பு சேக்கிழாருக்கு வாய்ப்பாயிற்று. 'பொன்முகலியாறு' சம்பந்தராற்பாடப் பெறுகிறது. கண்ணப்பர் வரலாற்றில் சேக்கிழாரால் விரிவு பெறுகிறது. 'தத்துவச்சரடு' எனத் தகும்படியான விளக்கம் கொடுக்க வல்லதொரு செழுமையான இலக்கியத்தடயத்தினை இராஜராஜன் பணிகள் வாயிலாகக் கண்டுதெளியலாம். 'The Great' என்ற பெரும்மன்னருக்குரிய நிலையில் நின்றும் உயர்ந்து இராஜாக்களுக்குக் கெல்லாம் இராஜாவாக விளங்கியவன் இராஜராஜன்.

## நாடகக்கலை வளர்ச்சி

இராஜராஜன் காலத்தில் இராஜராஜ நாடகம் நடத்தப்பட்டது. இரவிகுல மாணிக்க ஈஸ்வர நடனமாதர்கள் பாடி ஆடினர் என்ற குறிப்புக்கள் உள. கோயில்களிலே நாடகம் ஆடினர். கோயில்விழாக்களில் மேடையிடப்பட்டன. பெரியார்களது வரலாறு நாடகமாக்கப்படும் மரபு இருந்தது. இக் காலகட்டத்தில் ஆரியக் கூத்துத் தமிழிற் புகுந்துவிட்டது. நாடகத்திற்கெனவொரு குழு இருந்தது. நாடகசாலையில் ஆரியக் கூத்து, சாந்திக்கூத்துஎன இருவகையான கூத்துக்கள் ஆடப்பட்டன எனக் கருத இடமுண்டு. திருவாவடுதுறைக் கல்வெட்டு 'மானியம்' கொடுத்த செய்தியைக் குறிப்பிடும். பெரியபுராணம், தஞ்சைவாணன் கோவையில் நாடகக் குறிப்புகளும், காட்சிகளும்' உரையாடல்களும் விரவிவருவதனைக் காணலாம், தடுத்தாட்கொண்ட புராணத்தில் மறையவர் சுந்தரர் வாதிடல், நாடக நிலை நின்று பார்ப்போருக்குச் சுவை பயக்கும் ஒன்றாகும்.

நடிகர்களுக்குப் பரிசு கொடுக்கப்பட்டது. நிலம், பொன் என்பன உவத்தளிக்கப்பட்டன. குறவஞ்சி நாடகமுறை இருந்திருக்குமோவென ஊகிக்க இடமுண்டு, 'கிராமிய மரபு'டன் இணைந்ததொரு நாடகமுயற்சி நடந்திருக்கக்கூடும் இராஜராஜன் கலந்து நாடக நிலைமைகளினை அறியச் சான்றுகள் போதியளவில் இல்லை வடமொழி நாடகமரபு பேணப்பட்டுள்ளது. கடவுளரையும, முனிவர்களையும், மன்னர்களையும் போற்றும் அரசவை மரபே பெரிதும் போற்றப்பட்டிருக்கிறது வடமொழியிலே காளிதாசன், பவபூபதி, ஸ்ரீஹர்ஷ விசேடம் பெறுகின்றனர். நாடக உள்ளடக்கம் சமயம் சார்ந்ததாயிருந்திருக்கிறது. இராஜராஜன் காலத்துச் செழுமைமிக்கநாடகஆடல் மரபினெச்சசொச்சங்களாகவேவடமோடி;

தென்மோடிக் கூத்துக்கள் அமைதல்கூடும் அன்று வேத்தியல், பொதுவியல் மரபென வளர்க்கப்பட்டிருக்கலாம். உயர்மட்டத்துக் கலைக்கும் [Main Culture]; சாதாரண மட்டத்துக் கலைக்கும் [Sub-Culture] இணைப்பைக் காணும் வகையில் இன்று நம் சிந்தனை விரிய வேண்டும்.

## வடமொழிப் பயன்பாடு

பல்லவ பாண்டிய, சோழ மன்னர்கள் 'கிரந்த லிபி'யைப் பயன்படுத்தினர். தமிழ் 'வடமொழி'களுக்குக் கிரந்த வடிவம் பயன்படுத்தப்பட்டது. 'கிரந்த லிபி'யில் சாசனங்கள் எழுதப்பட்டன ஆயினும் சோழர்காலச் சமஸ்கிருத இலக்கிய வரலாறு செவ்வையாக இல்லை. மொழியின்பயன்பாடு, பிராந்திய அம்சங்களுடனும், அகில இந்திய நோக்கு நிலையிலும் இடம்பெறலாயிற்று வடமொழி சோழப் பெருமன்னர்களால் புனித மொழியாகக் கொள்ளப்பட்டதோடு, பொதுமொழியாகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. 'பொதுமொழி' மரபு பேரரசு வளர்ச்சிக்கு உதவியது. இதனைப் பரப்ப முதலாம் இராஜேந்திரன் உதவினன். மீமாம்சம் பரப்புதல், கலை பரப்புதல், இதிகாசம் (சிவ ரகசியம்) பரப்புதலாகிய வற்றுக்கு வைதிகப் பாரம்பரியத்தைப் பேணும் நோக்குடன் 'மொழிக்கொள்கை' அமைந்திருந்தது; பின்பற்றப்பட்டது. பல்லவர்களும், சோழப்பெருமன்னர்களும் வைதிகப் பண்பாட்டைநிலவச்செய்துவந்துள்ளனர். நிகண்டுகள் வடமொழியிலெழுதப்பட்டன. அகர வரிசைப்படுத்தப்பட்டவை. பிரசஸ்திகள் எனப்படும் மெய்க்கீர்த்திகள் எழுதப்பட்டன. பெரிய லேடன் [Lyden' செப்பேடு வடமொழிக காப்பியம் போன்றுள்ளது இதில் கரிகாலன், கோச்செங்கணன், விஜயாலயன், இராஜராஜன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர் இதில் 'அனந்தநாராயணன்' என்ற ஆசிரியர் அரசவைப் புலவராயிருந்தார் என்ற குறிப்புண்டு.

## நாட்டியக்கலை

இராஜராஜன் மங்கிச்சென்ற கலைசெல்வங்களை மீட்டவன் நடனச் சிற்பங்களை, 108 கரணங்களைத் தஞ்சைப் பெருவுடையார் (பிருகதீஸ்வரர்) கோயிலின் மேற்றளத்தில் அமைந்துள்ளான். இவனது பட்டப் பெயர்களுள் ஒன்று சிவபாதசேகரன். தாண்டவ இலட்சணங்களுக்கு வடிவம் கொடுக்கும் விருப்புடன் கோயிலின் மேற்றளத்தில் அவற்றைக் கரணங்களாக அமைத்தான்.

[6-ம் பக்கம் பார்க்க]

# நல்லவற்றை மிகுவிக்கும் நாட்சிறப்பு ஆடிமாதத்துப் புண்ணிய தினங்கள்

ஆடி மாதம் பிறந்ததும் தட்சிணாயனம் ஆரம்பமாகிறது. ஆடி முதல் மார்கழி வரை தட்சிணாயனம். தை முதல் ஆனி வரை உத்தராயணம். இந்த அயன புண்ணிய காலங்களில் கடல், குளம், நதி முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து பிதிருக்களின் திருப்திக்காகத் தர்ப்பணம் செய்வது தொன்று தொட்டுவரும் வழக்கம்.

ஆடி மாதத்தில்வரும் பூரம், சுவாதி, கார்த்திகை நட்சத்திரங்களும், அமாவாசைத் திதியும் புண்ணிய காலங்களாகும்.

## ● ஆடிப்பூரம்

சிவபெருமானுக்குத் திருவாதிரையும், திருமாலுக்குத் திருவோணமும், முருகனுக்கு விசாக நட்சத்திரமும் மிகச் சிறப்பாக உரியன போல, அம்பிகைக்கு உரிய சிறப்புத் திருநாள் பூரம் ஆகும். பூரத் திருநாளில் அம்பிகை திருவவதாரம் செய்தருளினள் என்றும் பெரியோர் கூறுவர்.

பூர நட்சத்திரம் ஒவ்வொரு மாதத்திலும் வருவதற்குரிய நாளாயினும், ஆடிப் பூரத்தில் வரும் நாளே மிகவும் சிறப்புடையதாகும். ஆடி மாதத்தில், உழவர்கள் வயல்களில் உழுது விதை விதைத்துப் பயிர் செய்யும் முயற்சியைச் செய்யத் தொடங்குவர் "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்" எனச் சிவஞானசித்தியார் கூறுவதற்கு ஏற்ப, உழவர்களின் உழவுத் தொழில் முயற்சி வெற்றி பெற்று அவர்கள் விதைத்த பயிர் செழித்தோங்கிப் பெரும் பயன் தருமாறு செய்தருள்பவள் அம்பிகையே ஆவள் ஆதலின் ஆடி மாதப் பூரம் மிகவும் சிறப்புடையதாகப் போற்றப் படுகின்றது. ஸ்ரீதேவி பூதேவிகளின் அம்சமாகக் கருதப் பெறும் ஆண்டாள் நாச்சியாரும் ஆடிப் பூரத்திலேயே தோன்றி அருளினள் என்பது வரலாறு.

ஆதலின் ஆடிப்பூர நாளில் அருளே வடிவமாக உடையவளும், உலக அன்னையும் ஆகிய அம்பிகையை அன்புடன் வழிபட்டுப் போற்றி வணங்குபவர்கள், எல்லா நலன்களையும் பெற்று மகிழ்வார்கள் என்பது திண்ணம்.

## ● ஆடிச் சுவாதி

சுவாதி என்பது, நட்சத்திரங்கள் இருபத்தேழனுள் மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். சுவாதி நாளில் பெய்யும் மழைத்துளி, கடலின் சிப்பியின் வாயில் விழுந்தால், முத்தாக வடிவெடுக்கும் என்று பெரியோர்கள் கூறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த சுவாதி நட்சத்திரத்தில்தான், சுந்தரமூர்த்திநாயனர், தமது நண்பராகிய சேரமான் பெருமானுடன் திருக்கயிலைசென்று சேர்ந்தனர் என்பர்.

சுவாதி நட்சத்திரம் சூரியனைப்போல் 18000 பங்கு பரிமாணம் உடையது ஒரேஞ் நிறம் வாய்ந்தது. மிகவும் பிரகாசம் உடையது. ஆதலின் இதனைச் சோதி என்றும் வழங்குவார். சோதி மயமான சுவாதி நாளில் சுந்தரமூர்த்திநாயனர் திருக்கயிலைக்குச் சோதிவடிவம் பெற்றுச் சென்றமை பெரிதும் பொருத்தமுடையதாகத் திகழ்கின்றது ஆதலின் இப்புனித நன்னாளில் நாங்கள் அனைவரும் நம்பியாரூரராகிய சுந்தரரையும்' அவர்தம் ஆருயிர் நண்பராகிய சேரமான் பெருமானையும், அவ்விருவரையும் ஆட்கொண்டு அருளிய சிவபெருமானையும் அன்புடன பணிந்து வழிபட்டு உய்வோமாக.

## ● ஆடிக் கிருத்திகை

எதில்லா மாதத்துக் கிருத்திகைகளும் சிறப்புடையனவே ஆயினும், தட்சிணயனம் தொடங்கும் ஆடி மாதத்தில் வரும் ஆடிக் கிருத்திகையும், உத்தராயணம் தொடங்கும் தை மாதத்தில் வரும் தை மாதக் கிருத்திகையும் தனிப் பெருஞ் சிறப்புடையனவாகும்.

## ● ஆடி-அமாவாசை

பிதிர் வழிபாட்டைக் குறிக்கும் ஒரு புண்ணியமான தினம் ஆடி அமாவாசையாகும் சூரியனும் சந்திரனும் ஒரேபாகையில் பூமிக்கு வரும் போது அமாவாசை திதி உண்டாகும் திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை, பாகத்தைக் குறிப்பிடும் ஒரு சொல் அமாவாசையின் கருத்தை ஞான முறையிற் கவனித்தல் நன்று சூரியன் ஞான காரகன், ஆத்மகாரகன் ஆவான். பிராணிகளின் ஆத்ம இயக்கம் சூரியனுற்தான் நிகழ்கிறது. ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், தவம் யாவும் சூரியனாலேயே தோன்றுகின்றன. சந்திரன் மனத்திற்கு அதிபதி. மகிழ்ச்சி, தெளிந்த அறிவு உற்சாகம், இன்பம் முதலியன சந்திரனால் அடையத் தக்கன. இத்தகைய சூரிய சந்திரர் இருவரும் ஒருராசியில் சஞ்சரிக்கும் நாள் புனிதமான நாள் அன்று விரதம் காத்தல் நோன்பு நோற்றல் சிறந்ததும் பெருமை தருவதுமான நன்னாளாகும். ஒவ்வொரு அமாவாசையும் பிதிர் கருமத்திற்குச் சிறந்ததாயினும், ஆடி அமாவாசை பிதிர் தருப்பணத்திற்கு மிகவும் சிறந்த தினமாகும்.

மக்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் மாலை நேரம் தேவர்களுக்கு தட்சணாயனம் தொடக்கம் காலைநேரம் உத்தராயணம் ஆரம்பம். அவர்களுடைய காலை, மாலை நேரங்களில் நாங்கள் வழிபடுதல் சிறந்த புண்ணியத்தைத் தருமென்பர்.

அமாவாசை பௌர்ணமி நாட்களில் கடல், தீர்த்தமாடுதல் நன்று. கடல் நீரை நமது பாவத்தைக் கழுவும நீராகவும் இறைவனது அருள் நீராகவும் நினைந்து. பிதிர்களின் பாவத்தைப் போக்கி, அவர்களுக்கு முத்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டி நீராடல் போற்றத்தக்கது. மூர்த்தி, தலம், தீர்த்தம் அமைந்த புண்ணிய தலங்களில் பிதிர்க்கடன் நிறைவேற்றுவது பொருத்தமாகும் எனப் பெரியோர் கூறுவர்.

நன்றி:

'சிவதொண்டன்'

---

## ★ இன்று ஆடி பிறக்கிறது

### ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

★ ★ ★

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாஉண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே.

நவாலியூர் க சோமசுந்தரப் புலவர்

---



## நன்நெறிக்கதை

மகாராஷ்டிர மாவீரன் சிவாஜி மிகப் பெரிய கோட்டையைக் கட்டினான். இங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர் "இந்தத் தொழிலாளர்களுக்கும் நான்தான் உணவளிக்கிறேன்" என்று சிவாஜி எண்ணினான்.

தற்பெருமையும் அகந்தையும் மெதுவாக அவன் மனதில் பதிந்தது அவனது குருநாதர் சமர்த்த இராமதாஸர் இதனை அறிந்துகொண்டார். சிவாஜிக்குத் தகுந்த பாடம் கற்பிக்க அவர் விரும்பினர். ஒருநாள் சிவாஜியின் அரண்மனைக்கு வந்தார் சிவாஜியை மிகவும் பாராட்டினர்

'சிவாஜி. நீ நிறையத் தொழிலாளர்களுக்கு உதவி செய்கிறாய் மிகப்பெரும் பணியினை நீ செய்து வருகிறாய்" என்று அவர் கூறினர். சிவாஜி மிகவும் மகிழ்ந்து உணர்ச்சி வசப்பட்டான்

"குருமகராஜ்! இவையனைத்தும் தங்கள் கருணையால்தான் நிகழ்ந்திருக்கின்றன" என்றான்.

'சிவாஜி, இந்தக் கற்பாறையை உடை" என்று குருநாதர் கட்டளையிட்டார் சிவாஜியும் அவ்வாறே செய்தான். அப்போது ஒரு தவளை அந்தப் பாறைக்குள்ளிருந்து துள்ளிக்குதித்தது. தண்ணீரும் சிந்தியது அப்போது இராமதாஸர் சிவாஜியைப்பார்த்து, "சிவாஜி இந்தப் பாறைக்குள்ளே இதற்கு உணவளிப்பது யார்?" என்று கேட்டார் சிவாஜிக்கு சுயநினைவு வந்தது. அவன் வெட்கித் தலைகுனிந்தான்.

"பிரபு! என்னை மன்னித்து விடுங்கள். என் அகந்தை அகன்றுவிட்டது எதிர்காலத்தில் இத்தகைய எண்ணம் எழாது" என்று சிவாஜி கூறினான்.

"நீ, நன்தான் செய்கிறேன் என்று ஒருபோதும் எண்ணாதே. எல்லாவற்றையும் இறைவனே செய்கிறார்" என்றார்.

ஆதாரம்:
சிவானந்தர் அருள்வாக்கு தொகுப்பு:

-க. கனகராசா ச. நீ

O நேற்று சுவாமி சிவானந்தர் சமாதி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

---

# ஒழுங்குபடுத்தப்பெற்ற...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

81 கரணங்கள் இராராஜன் காலத்தில் செதுக்கி முடிக்கப் பட்டன. அவை நாட்டிய சாஸ்திரச்செய்யுள்களோடு செதுக்கப்பட்டுள்ளன.

இராஜராஜனது கரணங்களினை அடிப்படையாகக் கொண்டு சமகாலத்து நாட்டியக்கலை நர்த்தகிகளும், ஆய்வறிவாளரும் இக்கலையினை மெருகு செய்வதற்கு முயலலாம். கலாநிதி பத்மா சுப்பிரமணியம் புதுமெருகு கொடுக்கும் பணியில் முயற்சிகள் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

### ஈழத்தில் சோழர் ஆட்சி

திருப்புமுனையுண்டாக்கிய சோழர்களது வரலாறு நமது இன்றைய வரலாற்றிற்கு உறுதி புரிவது. சோழவம்சம் தமிழகம் முழுவதையும் ஆண்டவம்சம், சாம்ராச்சியச் சின்னம். கங்கைநதியின் நீரைக் கொணர்ந்து ஆண்டபரம்பரையினர். வெளிஇந்தியாவிற்கும் ஆட்சிப் பரப்பை நீட்சி செய்தவர்கள். சோழர் கடற்படை வலிமை மிக்கிருந்தது. பேரரசின் ஆதிக்கத்திற்கு இது உதவிற்று 'நடராஜ வடிவம்' பேரரசு வளர்த்தெடுத்த பெரிய சிற்பம். அன்று இலங்கையின் தலைவிதியை நிர்ணயித்தது தஞ்சை. சோழர்களின் தலைநகராயிருந்தது பொலநறுவை. ஜனநாதமங்களபுரம் எனப்பட்டது. மாந்தையில் இராஜராஜேஸ்வரம் கோயிலமைந்தது. திருமலையில் இராஜராஜப் பெரும் பள்ளி அமைந்தது. பதவியாவில் 'இரகுவிலமாணிக்க ஈஸ்வரம்' இலங்கியது. 77 ஆண்டுகள் ஈழத்தில் சோழராட்சி நிலவியது. 'கங்கையும் கடாரமும் கொண்டனர் சோழர்' என்பது கல்வெட்டு (கடாரம்-தற்கால இந்தோனேசியா) திருகோணமலையிலுள்ள மாங்கேணிக் கல்வெட்டில், சோழ இலங்கேஸ்வரன் என்பான் சோழராச்சியத்தில் நிர்வாகத்தைப் பெற்றிருந்தான். ஊர்கள், சபைகள், மண்டலங்கள் அமைக்கப்பட்டன. 8-ஆம், 9-ஆம் நூற்றுண்டுகளிலேயே தமிழ் நாட்டு, கேரள. கன்னட இராணுவப் பிரிவுகள் வந்தன. கடல் வாணிபமும், கப்பல்கட்டும் துறையும் பெருவளர்ச்சியுற்றிருந்தன. வேளைக்காரப் படை, அகம்படியார், நானாதேசிகள் ஐந்நூற்றுவர் என்போர் இடம்பெற்றனர். தனித்தனி வியாபாரக் குழுக்கள் இயங்கின.

### அழியாத கோயில்கள்

அழியாத பொருட்களால் நிரந்தரச் சின்னமாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் கோயில்களை அமைத்தவர்கள் சோழர்கள். சகல கலைகளையும் கொண்டு விளங்குகின்ற மையப்பிரதேசங்களாக- இருதயங்களாக இலங்குவன சோழர் காலக் கோயில்கள். பொலநறுவையில் 16 கோவில்கள் உள்ளதாகக் கூறுவர். இரண்டாவது ஐந்தாவது. ஆறுவது சிவதேவாலயங்கள் என அழைக்கப்படும். 2-வது சிவதேவாலயம் தனிக் கருங்கற் கட்டடமாகும். மாந்தையிலும், திருகோணமலையிலும் ஆலயங்கள் நிறுவப்பட்டன. சோழ சிற்பங்களில் நாயன்மாரது சிற்பங்கள் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெறுவன

சிங்கள சந்தேஸ (தூது) இலக்கியங்கள் கோயில்களது விபரங்களை கூறுவன. வேத ஒலி' அருத 'சதுர்வேதி மங்கலம்' இருந்தமை மனங்கொள்ளத்தக்கது. இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தினை வளர்த்தவர்களாக நிஸங்கமல்லன், விஜயபாகு, பராக்கிரமபாகு என்றபெருமக்கள் குறிக்கப்படத்தக்கவர்கள்.

இலங்கையில் 1982-ம் ஆண்டு அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் அபயகிரி விகாரைக்கு அருகாமையில் கண்டெடுக்கப் பட்டது காரைக்காலம்மையாரது வெண்கலச் சிற்பமும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமய அனுட்டானங்கள் வேரூன்றிய காலம் சோழர் காலம் அக்காலத்துச் சிற்பச் சிறப்புகளை எடுத்து விளக்குவார் அறிஞர், கலாவிமர்சகர் சிவராமமூர்த்தி என்பார். சிற்பச் சிறப்பிலே நுட்பங்கள், கலைவேறுபாடுகள், தனித்தன்மைகள் எடுத்துப் பேசப்படும் தனித்துவச் சிறப்புக் கொண்டவை. இலங்கையரான கலாயோகி ஆனந்தக்குமாரசாமியின் 'Dance of Shiva' நூலும் குறிப்பிடத்தக்கதொன்று. இலங்கை வரலாற்றில் சோழர் ஆட்சிக்கால வரலாற்றுக்குத் தனித்துவம்மிக்க- சிறப்பிடம்உண்டு.

---

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம்
வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

---

# இலக்கியமும் சமயமும் அடிப்படையாகக்கொண்ட "நாளும் கோளும்"

மனிதர்களது இயக்கமும் இயற்கையினது இயங்கியல் தத்துவமும் இணைந்துள்ள தன்மையைச் சாதாரண வாழ்க்கை நடைமுறையிலிருந்தே அறிந்து கொள்ளலாம். காலை, மாலை, நண்பகல், நடுநிசி, கார், கூதிர், முன்பனி, பின்பனி, வசந்தம், கோடை, இலையுதிர், இளவேனில் என்ற பெயர்களது பயன்பாடும் - காலநிலைத் தன்மையும், 'நாட்கள்' மனிதர்களினதும், இயற்கையினதும் வேகத்திற்கும் இயல்புக்கும ஏற்பவே அசைகின்றன என்பதனைத் தமிழர்கள் தொன்மைக் காலம்முதலே கண்டறிந்துள்ளார்கள்

சங்ககாலஇலக்கியப்பொருள் மரபில் இயற்கை நெறிக்காலத்தின் சுவடுகளைச்சுட்டுமிடத்தில் 'பொழுது' என ஒன்றைச் சுட்டுவதனைக் காணலாம். தொல்காப்பிய இலக்கண விதியிலும், இறையனார் களவியலுரையிலும் அகத்திணை இலக்கிய நெறியினை அழுத்தியுரைக்குமிடங்களிலெல்லாம் 'நிலமும்பொழுதும்' முதன்மை பெறும் பண்பினைக் காண முடியும். முதல், கரு, உரி என்ற பகுப்பினல் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற நிலத்திணைகளின் ஒழுக்கங்களைத் தெளிவுடன் விபரிக்கும் முறைமையினுல் 'நாளும பொழுதும்' கொண்டுள்ள தன்மை துல்லியமாகப் புலப்படுகிறதல்லவா? ஞானசம்பந்தக் குழந்தைக்கு நாட்களது தன்மைகள் நன்கு விளக்கங் கொண்டிருந்தமையைக் 'கோளறுபதிகம்' துலக்கி நிற்கின்றது. "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்குமிகவே" என்று பதிகப் பாடல்களொவ்வொன்றிலும் வேண்டுதல் செய்கின்ற திறன் 'காலத்தை'ப் பிரீதிசெய்யும் திறனைக் காட்டிநிற்கின்றதன்றோ! நம் வாழ்விலும் நாட்கள் இனியனவாய், நல்லன செய்வனவாக எதிர்கால சுபீட்சம் நல்கும் பொற்காலமாகவே உதயமாக வேண்டும் என்று வரம் வேண்டுவோமாக'

**கஜேன்**
**மினி சினிமா**
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30,
4-30, 7-00
**The Highets Honour**
இராணுவத்தினரதும்
சிறைக்கைதிகளினதும்
அட்டூழியங்கள்

**சோபிகா மினி**
(பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 6-15
முரளி, ஊர்வசி, லட்சுமி
**ஒரு மலரின் பயணம்**

**லிபேர்ட்டி மினி**
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30, 2-30, 6-30
எம் ஜி ஆர், சிவாஜி
**கூண்டுக் கிளி**
குடும்பத்துடன்
பார்க்கவேண்டிய படம்

**குமரன்**
**மினி சினிமா**
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30,
எம் ஜி ஆர்., மஞ்சுளா
நம்பியார் நடித்த
**இதயவீணை**

**ஸ்ரான்லி மினி**
5X5 திரையில்
10-30 2-30, 6-00
கமல், மாதவி,
ஜெய்சங்கர். சரத்பாபு
நடித்த
பாலாஜியின்
**சட்டம்**
தாய்க்குலத்திற்கு
தனி இடமுண்டு

**நியூ சாந்தி மினி**
(யாழ். சாந்தி சினிமாவில்)
10-30, 2-30, 4-30, 6-30
**Grave of the Vampire**
SEX DRAGULA
கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்,

**தேவி மினி சினிமா**
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30. 6-30, 9-30
Real BRUCE LEE in
**The Invisible**
கராட்டி சண்டைப்படம்
இதுவரை யாழ்ப்பாணத்
தில எந்தத் திரையரங்கி
லும் திரையிடப்படாத
கராட்டிப் படம்.

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p. m.
**"SPLASH"**
(2 நாட்கள் மட்டும்)
16-7-85 தொடக்கம்
Jack Lemmon
Sissy Spacek
**Missing**
(வயதுவந்தவர்களுக்கு
மட்டும்)

**வின்ஸர்**
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-00
**GANDHI**
**காந்தி அடிகள்**
அநேகரின் வேண்டுகோளுக்
கிணங்க செவ்வாய்க்கிழமை
(85-07-16 வரை நீடிக்கப்
பட்டுள்ளது.

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 3-00, 6-45
தியாகராஜன், நளினி
விஜய்காந்த், விஜி
**நல்ல நாள்**

**உஷா மினி**
(கே கே எஸ். வீதியில்
தினசரி 10-30. 2-30
4-30, 6-15
Debra Blee in
**The Beach Girls**
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்)

**பவித்ரா மினி**
(யாழ். இந்துக்கல்லூரியடி)
10-30 2-30, 4-30, 6-30
Honest Nest வரிசையில்
THE INGLORIOUS
BASTARDS

**மொடேர்ண்**
**மினி சினிமா**
தினசரி 3 காட்சிகள்
Richard Harrison
in
**Intrusion Cambodia**
வயது வந்தவர்கள் மட்டும்

**மேபெயர் மினி**
(கன்னாதிட்டி)
10-30 a. m.
**Guns of Navarone**
War Film
மாலை 2-30, 6-30
பிரதாப், கமலதா நடித்த
**சொல்லாதே**
**யாரும் கேட்டால்**
திகிலூட்டும் சம்பவங்கள்
நிறைந்த படம்.

**பாலகன்**
**வீடியோ விஷன்**
சாந்தி சினிமா முன்பாக
தினசரி 10-30,
2-30. 4-30 6-30. 9-30
Richard Roundtree in
**Shaft in Africa**
(Adults only)
கறுப்பு இனத்தை
சேர்ந்த ஒருவன் தனது
இனத்தை காப்பாற்ற
எடுக்கும் முயற்சியும்
அவனை காதல் வலையில்
சிக்கவைப்பதற்கு கன்
னியர் படும் பாட்டை
யும் கண்டுகளிக்க
இன்றே பாருங்கள்
[கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்]

**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
**Night Shift**
நாளை முதல்
10 30 2-15 4-30,
6 45 9-00
Five Times All China
Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
**Shaolin Temple**
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ
கராட்டி வீரசாகசங்கள்
நிறைந்த சீன வீரர்களின்
திகிலூட்டும்சம்பவங்களை
நேரில் பார்ப்பதற்கு ஓர்
சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில்
200 நாட்களுக்கு மேல்
ஓடிய படம்.

**லிடோ சினிமா**
10-30. 2-15. 5-30
பாலு மகேந்திரனின்
**நீங்கள் கேட்டவை**
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

## வல்லைப்பாலம்

(கரவெட்டி)

கடந்த ஆண்டு தகர்க்கப்பட்ட பாலங்களில் ஒன்றான வல்லைப்பாலத்தின் ஒருபகுதி மண்போடப்பட்டு வாகனங்கள் வசதியாகப் போகக்கூடிய வகையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மற்றைய பகுதி வேலைகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறன.

## இளைஞர்களுக்கு ஒழுக்கம் அவசியம்

(யாழ்ப்பாணம்)

எந்தவொரு சமூகத்தின் வாழ்வும் இன்றைய சிறார்களின் ஒழுக்க சீலத்திலும் பெற்றோரின் சீரிய வழி நடாத்துதலிலுமே பெரிதும் தங்கியுள்ளது. இதற்கு அச்சாணியாக அமைந்தது சமயக்கல்வி இதனை நன்குணர்ந்த இவ்வித்தியாலய அபிவிருத்திச் சபையினர் வாரஇறுதிகளில் இலவச சைவசமய வகுப்புகளை இன்று அங்குரார்ப்பணம் செய்வதை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். இவ்வாறு வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இலவச சைவ சமய வகுப்பை ஆரம்பித்து வைத்த அகில இலங்கை சைவபரிபாலன சங்கச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இவ்வித்தியாலய மாணவர்கள் சமயப் பொதுப் பரீட்சைகளிலும் பண்ணிசைப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பல பரிசுகளைப் பெற்றமை பாராட்டத்தக்கது.

இவ்வங்குரார்ப்பண விழாவிற்குப் பொறுப்பாளர் கி. ஜெயபாலன் தலைமை தாங்கினார்.

## தமிழர். ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளும் வகையில் தமிழர்களையும் இலங்கை அரசையும் சந்திக்கவைப்பதற்கு இந்திய அரசு முயற்சி செய்துவருகிறது என்று கூறினர்.

பூட்டானில் நடந்த பேச்சுக்கள் ஓரளவுக்கு வெற்றியளித்துள்ளனவென்று கூறிய அவர் சிக்கலான பிரச்னைகள் விவாதிக்கப்படவுள்ளன என்றார். அடுத்த மாதம் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகும்போது இரு தரப்பினரும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகவிருப்பார்கள் என்று தாம் நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் மொழியும் கலை கலாசாரங்களும் இந்தியாவில் மட்டுமின்றி உலகம் புழுவதிலுமே தனித்துவமான ஓர் இடத்தைவகித்து வருகின்றன என்று திருகாந்தி புழகாரம் சூட்டினார்.

## தமிழ்நாட்டில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பிரதமர் ராஜீவுடன் இந்திராகாங்கிரஸ் நடாளுமன்ற உறுப்பினர் திருமதவை ஜயந்திமாலா பாலி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. பழநியாண்டி உட்பட பல பிரமுகர்கள் அமர்ந்திருந்தனர்.

லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஊர்வலத்தில் அலங்கரிக்கப்பட்ட குதிரைகள், யானைகளும் ஏராளமான சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் வந்தன. சென்னை மரீனா கடற்கரையில் காங்கிரஸ் நூற்றாண்டு வைபவத்தினை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் ராஜீவ்காந்தி உரையாற்றினர். (அ)

## வேலைக்காரச் சிறுவன் சடலம்:
## பதின்மூன்று நாட்களின்பின் டாக்டரிடம் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள டாக்டர் ஒருவரின் வீட்டுவேலைக்காரச்சிறுவனின் சடலம்நேற்று அதே டாக்டரிடம் ஒப்படைக்கப்பட்டு கோம்பையன் மணல் மயானத்தில் நேற்று மாலை புதைக்கப்பட்டது.

வேலைக்காரச்சிறுவனின் மரண விசாரணை யாழ். எஸ் நீதவான் நாகரைராசா முன்னிலையில் நடைபெறுகிறது.

சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு டாக்டர் விண்ணப்பித்ததை தொடர்ந்து சடலத்தை டாக்டரிடம் ஒப்படைக்குமாறு பணிக்கப்பட்டது.

வேலைக்காரச்சிறுவனின் சடலம் இம்மாதம் 3-ம்திகதியாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டது. சவச்சாலையில்சடலம் 13 நாட்கள்வைக்கப்பட்டிருந்த பின், நேற்று டாக்டரிடம் ஒப்படைக்கப் பட்டது.

விசாரணை இம்மாதம் 18-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

## புதியசந்தை

(மண்டைதீவு)

மண்டைதீவில் புதிய சந்தையொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சந்தை மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியால் மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. என். இராமச்சந்திரனால் திறந்துவைக்கப்பட்டது.

## திம்புவில். .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுபற்றியும் ஆலோசிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்த கூட்டத்தில் இலங்கை அரசு புதிய சில யோசனைகளை முன்வைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் அதே வேளை தமிழ் அமைப்புக்களின் யோசனைகளை முன்வைக்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

## தவறு

(யாழ்ப்பாணம்)

ஆறு தமிழ் அமைப்புகளும் கூட்டறிக்கை தாக்கல்என்று நேற்றைய 'ஈழநாடு' முதல் பக்கச் செய்தியில், இந்த அறிக்கையை ஆறு அமைப்புக்களின் சார்பில 'புளட்' டைச் சேர்ந்த திரு சார்ள்ஸ் சமர்ப்பித்தார் என்றிருப்பது தவறு 'ரெலோ, வைச் சேர்ந்த திரு சார்ள்ஸ் சமர்பித்தார் என்றிருக்க வேண்டும்.

## நெடுந்தீவில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டிகளுக்கு 13 600 ரூபா செலவானது,

இப்பணத்தில் 10,600 ரூபாவை, 83 அகதிகள் புனர்வாழ்வு நிதியம் வழங்கியது. மிகுதிப் பணத்தை யாழ் நகரிலுள்ள 3 ஸ்தாபனங்கள் வழங்கியுள்ளன. [க]

## இந்து மகளிர் கல்லூரிக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் ஒரு சிறந்த பெண்கள் மகளிர் கல்லூரியாக யாழ். இந்துக் கல்லூரி விளங்குகின்றது. இங்குள்ள மாணவிகள் ஒழுங்கு கட்டுப்பாடு போன்ற நற்பண்புகளையுடையவர்களாக விளங்குகின்றார்கள். இக்கல்லூரியின் அதிபரின சிறந்த சேவையே இதற்கு காரணம்."

இவ்வாறு யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்திருந்த நல்லூர் வடடாரக் கல்வி அதிகாரிதிரு. சு சிவஞானமூர்த்தி கூறினார், அவர் மேலும் பேசுகையில்

அண்மைக்காலங்களில் பல கல்லூரிகளில் மாணவரின் கல்வி பாதிக்கப்பட்ட பொழுதும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் கல்வி பாதிக்கப்படாமலிருக்க வேண்டிய பல ஒழுங்குகளை அதிபர் கையாண்டார். இன்று இக் கல்லூரியில் பயிலும் மாணவிகள கல்வி, விளையாட்டு, சங்கீத, நடனம், நாடகம், சாரணீயம் போன்ற துறைகளிலும் முன்னணி வகித்து வருகின்றனர். அகில இலங்கை ரீதியிலும் பல பரிசுகளை இவர்கள் பெற்றுள்ளனர் என்றார்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இக்கல்லூரியில் சேர்வதற்கும் மாணவிகள் போட்டிப் போடுகின்றார்கள் என்று கூறிய அவர் இங்குள்ள ஆசிரியர்களின் சேவையே இதற்கு காரணம் என்றார். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்களையும் அவர் வழங்கினர்.

**COMMERCE CENTRE**
திருநெல்வேலி—ஆடியபாதம் வீதி.
கணக்கியல் A/L 86,87
திரு. N. வன்னியசிங்கம்
ஆரம்பம் : 17-7-85 மாலை 3-30 மணி
4471

**மீண்டும் ஒரு சந்தர்ப்பம்**
யாழ். பல்கலைக்கழக மாணவர் வழங்கும்
**"எங்கள் மண்ணும் இந்த நாட்களும்"**
—கவிதா நிகழ்வு.
**"மண் சுமந்த மேனியர்"**
— நாடகம்.
இடம்; யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்.
காலம்: 1985—07—17.
புதன் பிற்பகல் 3 00 மணி.
4473

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# "பாதுகாப்புச் செலவு 7 மடங்கு அதிகரித்துள்ளது இன்னும் ரூ. 15 கோடி கேட்கிறார் பாதுகாப்பு அமைச்சர்!"

## புளத்சிங்களவில் நிதியமைச்சர் தகவல்

(புளத்சிங்கள)

"பாதுகாப்புப் படைகளுக்கு செலவிடப்படும் பணம் சமீப காலத்தில் ஏழு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இப்பொழுதும் 15 கோடி ரூபாய் தரும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார். என்னதான் இருந்தாலும் எவ்வாறாயினும் இத்தொகையைத் தேடிக்கொடுப்பேன். தீவிரவாத பிரச்சினைக்கு பெரும் தொகைப்பணம் விரைவாக கிடைக்காமல் போகுமானால் இன்னும் இரு ஆண்டுகளில் எமது நாடு மிகப்பயங்கரமான ஒரு நிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கும்."

இவ்வாறு நிதியமைச்சர் திரு. றோனி டி மெல் கடந்த சனியன்று புளத்சிங்களவில் கிராமிய வங்கிக் கிளையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

தீவிரவாதப்பிரச்சினைக்குதிம்புவில் நடைபெறும் பேச்சுக்களின் மூலம் சகல மக்களும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் ஒரு தீர்வு காணப்படவில்லையென்றால் எமது நாட்டின் எதிர்காலம் மிக மோசமாக இருக்கும் என்று கூறிய அமைச்சர், வடக்கு கிழக்கு நிலைமைகள் இன்னும் சுமுக நிலைக்குத் திரும்பிவிடவில்லை. சிலர் சத்தியாக்கிரகங்களையும் இன்னும் சிலர் எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடத்திவருகின்றார்கள் என்றார்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலைமை நீடிக்குமானால் வெளிநாட்டு உதவிகளில் வெட்டு விழும் நிலைமை ஏற்படலாம். அபிவிருத்தி வேலைகள் கைவிடப்பட நேரும். வாழ்க்கைச் செலவு அதிகரித்து வேலையில்லாத்திண்டாட்டம் விஸ்தரிக்கும் என அமைச்சர் எச்சரித்தார்.

1971ம் ஆண்டுக் கிளர்ச்சியை விட இன்றைய நிலைமை 100 மடங்கு மோசமானது எந்நேரமும் போர் நடத்திக் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்றார் அவர்.

## வவனியாவில் தரகர்களின் தொல்லைகள் அதிகரிப்பு

[வவனியா]

நகரில் உள்ளூர் தரகர்கூட்டம் அதிகரித்துள்ளது. நகருக்கு ஏதேனும் விளைபொருள்களை மக்கள் விற்பனைசெய்யக் கொண்டுவந்ததைக் கண்டால் போதும், அதனைக் கொண்டு செல்லவிடுகிறார்களில்லை இந்த தரகர்கள்.

அதுமட்டுமா ஏழை விவசாயிகளிடம் இருந்து சில தரகர்கள் பெரும் பணம் சம்பாதிக்கின்றனர்.

போலித் தராசுகளை வைத்து தரகர் கூட்டம் பணம் உழைக்கின்றனர். முழுக்கமுழுக்க பாதிப்படைபவர்கள் ஏழை உழைப்பாளிகளான விவசாயிகளே.

சுங்க விற்பனை/02/1985

இலங்கை சுங்கத்திணைக்களம் - யாழ்ப்பாணம்

### கேள்விப்பத்திர விண்ணப்பங்கள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள் முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் மூலம் விற்பனைக்கு விடப்படும்.

பொருட்கள் பற்றிய விபரங்கள்

1. இந்திய பருத்தி 'யானை மார்க்' வொயில் சேலைகள்.
2. கிறிம்ஸ்லொன் (GRIMSLON) கலப்பு (விஸ்கோஸ் 66% பருத்தி 34%) இந்தியச்சேலைகள்.
3. காற்சட்டைத்துணிகள் (கொரியா நாட்டு உற்பத்தி
4. YKK மார்க் சாய்வுக் கொழுவிகள் (Zip Fastners, 8"
5. நடாப்பதிவுக் காட்சிக் கருவிகள் (V. C. RR.-NV 250 EN)

இவற்றுக்குரிய கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா ஐம்பது (ரூபா 50/-) செலுத்தி யாழ். சுங்க அலுவலகத்தில் முற்பகல் 10-00 மணியிலிருந்து பிற்பகல் 1-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் 1985ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ம் திகதி தொடக்கம் 25ஆந் திகதி பிற்பகல் 1-00மணி மட்டுமே வழங்கப்படும், பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 1985ஆம் ஆண்டு ஆகஸ்து மாதம் 05ஆந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு முன்னதாக மூடப்பட்ட அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் எனது அலுவலகத்தில் நேர்முகமாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சேர்ப்பித்தல் வேண்டும் தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வி விண்ணப்பப்படிவங்கள் 1985ஆம் ஆண்டு ஆகஸ்து மாதம் 06ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00மணிக்கு யாழ். சுங்க அலுவலகத்தில் திறக்கப்படும். இவ்வேளையில் விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களது அனுமதிபெற்ற பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் யாழ். சுங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும். (தொலைபேசி இலக்கங்கள்: 22103, 22173)

ஏற்கப்பட்ட விண்ணப்பதாரி விற்கப்படும் பொருட்களுக்குரிய பெறுமதியான முழுத்தொகையையும் வங்கி 'டிறுப்ற்' (Bank Draft) மூலம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு இரண்டு நாட்களுக்குள் யாழ். சுங்க அலுவலகத்தில் கட்டவேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைக்கமைய கேள்விக்குரிய பொருட்களின் முழுத்தொகையையும் ஏற்கப்பட்ட விண்ணப்பதாரி செலுத்தத்தவறின் அவரது கோரல் நிராகரிக்கப்படும்.

செ. கணேஷ்
சுங்க மேலதிக இறங்குதுறை அளவையாளர்,
யாழ். மாவட்டம்.
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
15-7-85. [4472]

## அரசாங்கம் பொறுப்பேற்றது

(கொழும்பு)

சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தை கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்ரஸ்பெரெரா வின் கோரிக்கையின் பேரில் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

## மண்டலாபிஷேகம்

(வண்ணார்பண்ணை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதியுறை அருள்மிகு வீரபத்திரசமேத ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மண்டலபூர்த்தி அஷ்டோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறுகிறது இதுதொடர்பான யாகாரம்ப நிகழ்ச்சிகள் இன்று காலை ஆரம்பமாகின்றன.

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

காரைநகர் அரசடிக்காடு அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமிகோவில் வருடாந்த உற்சவம் நாளை 17-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 31ம் திகதி ரதோற்சவமும் அடுத்தமாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். இரண்டாம் திகதி பூங்காவனத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

## மருந்து இல்லையாம்

(வவனியா)

வவனியா நகரிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் இல்லையாம்.

கால்நடைகளுக்கு ஏதேனும் நோய்காரணமாக பொதுமக்கள் அங்கு சென்றால் மருந்து இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றதாம்

அதேவேளையில் கால்நடைகளுக்குத் தேவையான மருந்துவகைகளை வெளிச்சந்தையில் பொதுமக்கள் கூடுதலானவிலைக்கு வாங்க வேண்டியுள்ளது எனப் புகார் கிடைக்கின்றது

இங்குள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி மருந்துவகைகள் மட்டுமே கையிருப்பில் உள்ளதாக அறியப்படுகின்றது ஏனைய மருந்துவகைகள் எதுவுமே இங்குஇல்லையென நம்பகமாகத்தெரியவருகின்றது கடந்த மூன்று மாதகாலமாகக் கோழிக்குஞ்சு விநியோகமும் நடைபெறவில்லை.

## யாழ். மாவட்டத்தில் நிர்வாக அதிகாரிகள் 13 பேர் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர்களுக்கு உதவியாக 13 நிர்வாக அதிகாரிகள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

கச்சேரியில் நிர்வாக உதவியாளர்கள்போல் இந்த 13 உத்தியோகத்தர்களும், உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பணியாற்றுவார்கள்.

இந்த 13 நிர்வாக அதிகாரிகளும் முக்கிய பொறுப்புகளை ஏற்று உதவி அரசாங்க அதிபர்களுக்குப் பக்கத் துணையாகப் பணியாற்றுவார்கள் எனக் கூறப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்குச் செல்லும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்திசெய்யவும் அவர்களுக்கு துரிதமாகச் சேவைசெய்யவும் இந்த நிர்வாக அதிகாரிகள் பெருமளவில் உதவுவார்கள் என்று கூறப்படுகிறது. [க]

## மோட்டார் சைக்கிள் யாருடையது?

நெல்லியடியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகக்கூறப்பட்ட 86 தொடர் இலக்க ஹொண்டாமோட்டார் சைக்கிள் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் விடப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி எடுத்துச் செல்லவும்.

### மரண அறிவித்தல்
### திருமதி பொன்னையா இரத்தினம்

காலம்சென்ற மலாயன் பென்ஷனியர் பொன்னையாவின் அன்பு மனைவி இரத்தினம் காலமானார். அன்னார் திருமதி தவமணி பாலச்சந்திரன், சிறிஸ்கந்தராஜா (லங்கா சீமேந்து லிமிட்டெட் காங்கேசன்துறை), சிவராஜா (பல்கலைக்கழகம் மட்டக்களப்பு), கணேசமூர்த்தி (அல்மனார் கல்லூரி கந்தேசு) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைச்சாமி பாலச்சந்திரனின் மாமியாரும் ஆவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-7-85 இன்று பாரிமணியம் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று 2-30மணிக்குகொத்தியால் மயானத்தில்தகனம் செய்வதற்குஎடுத்துச் செல்லப்படும். — பாரிமணியம் ஒழுங்கை தெல்லிப்பளை. (4474)

### மரண அறிவித்தல்
### செல்லப்பா அப்புத்துரை

(முன்னாள் பிரதம லிகிதர் பணில்கந்தை எஸ்டேட் டெனியாயா)

செல்லப்பா அப்புத்துரை காலமானார் இவர் பெருமாளின் அன்புக் கணவரும், சிறீதரனின் [லண்டன்] தந்தையும், வில்லியனின் மாமனாரும், கெவின் கிறிஸ்தபர், நடஷாவின் பாட்டனுருமாவார்.

ஈமக்கிரியை அன்னாரின் இல்லத்தில் 16-07-85 செவ்வாய்க்கிழமை இன்று பி. ப. 2-00 மணிக்கு நடைபெறும்.

கேசரி றோட்,
தையிட்டி,
காங்கேசன்துறை.

(4453)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜுலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389, 24126,